Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 06

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01 | பிரமோதூத ஞூ வைகாசி மீ 29ஆம் உ | செவ்வாய்க்கிழமை | (12 - 06 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஃ 18 | ஓசை 114

## மனைவியால் கொலையுண்ட இலங்கை டாக்டரின் சடலம் வருகின்றது!

(கொழும்பு)

பின்லாந்தில் வைத்து கடந்த வருடம் செப்டம்பரில் மனைவியால் சுட்டுக் கொல்லப்பட்ட இலங்கை டாக்டரின் பூதவுடலை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பலாங்கொடையைச் சேர்ந்த இந்த டாக்டர் 1970 ஆம் ஆண்டு பின்லாந்து சென்று தொழில் புரிந்து வந்தார். முதலில் ரஷ்யப் பெண்ணை திருமணம் செய்த இவர் பின்னர் அவரை விவாகரத்துச் செய்து விட்டுப்பின்லாந்து பெண்ணை மணந்தார்.

இவரைக் காணவில்லை என மனைவி பின்லாந்து பொலிஸில் புகார் செய்தார். இதுபற்றி இங்குள்ள உறவினர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இலங்கைப் பொலிஸார் மூலம் சர்வதேச பொலிசாரின் (6ஆம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனை முதல் பொத்துவில் வரை

# பொலிஸ் நிலையங்கள் புலிகளின் வசம்!

## கல்முனை, களுவாஞ்சிக் குடியில் மோதலில் 14 இராணுவத்தினர் மாண்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பகுதியில் பொலிஸாரின் அத்துமீறிய செயல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் பெரும்பாலானவை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டன. இதைத்தொடர்ந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இரண்டு வேறுபட்ட மோதல் சம்பவங்களின்போது பதின்நான்கு இராணுவத்தினர் இறந்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சிங்களப் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை முஸ்லிம் வியாபாரிகளைத் தாக்கியதைத் தொடர்ந்து இப் பிரச்சினை ஆரம்பமானது. வியாபாரிகளைத் தாக்கியவர்களை புலிகள் விசாரிக்க வேண்டும் என உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்களை ஒப்படைக்க நேற்றுக் காலைவரை புலிகளால் பொலிஸாருக்குக் கால அவகாசம் கொடுகப்பட்டிருந்தது.

கொடுக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்ததும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்கள் புலிகளால் முற்றுகையிடப்பட்டது.

இதையடுத்து பொலிஸ் விடுதியில் இருந்து பொலிசார் முழுமையாக வெளியேறினர். இவர்களை விடுதலைப் புலிகள் பாதுகாப்பாக விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதேபோன்று வாழைச்சேனை, கல்குடா, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, வெள்ளாவெளி, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களும் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன. பொலிஸார் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்பொலிஸ் நிலைய முற்றுகையின் போது 300க்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச் சபை கொழும்பில் இயங்காது

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபை கொழும்பில் அமைந்துள்ள தென் ஆசிய வெளியீட்டுச் சேவையை மூடிக் ஹொங் ஹொங்கில் காரியாலயத்தை அமைக்கவுள்ளது. கொழும்பில் நிறைவேற்றுச் செயலராகக் கடமையாற்றும் ஆன் றணசிங்கி செப்ரம்பர் இறுதியில் இளைப்பாறும் அதே வேளையில், சர்வதேச மன்னிப்புச்சபைஅதன்தென்ஆசிய வெளியீட்டுச் சேவையைக் கொழும்பில் மூடிக்கொள்வது ஒரு தற்செயலான நிகழ்வென்று மன்னிப்புச்சபை லண்டனிலிருந்து வெளியிட்ட செய்தி அறிக்கை ஒன்று கூறுகிறது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

தாய்ச் சங்கம் கிளைகளோடு தொடர்பு கொள்வது வழமையான நிகழ்வாகும். அதற்காக ஒன்றன்பின் ஒன்றாக வந்த இரு நிர்வாகங்களிடமும் அரசாங்க விஸா பெறுவதற்கு விண்ணப்பித் திருந்தோம். விஸாவுக்கான விண்ணப்பங் (6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வெடி மருந்துகள் மீட்பு

(கொழும்பு)

டாம் வீதியில் வீடொன்றில் போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அவ்வீட்டைத் தேடிய பொலிசார் நிலக்கண்ணி வெடி தயாரிப்பதற்கு தேவைப்படும் அலுமீனியம் பவுடர், திரி, 250 மீற்றர் மின் கம்பி ஆகியன கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காக முஸ்லிம் இளைஞர் ஒருவர் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

## போலி பாஸ்போர்ட் விசா மோசடி வர்த்தகர் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

கப்பல் காப்டன் ஒருவரால் வழங்கப்பட்ட போலி வெளிநாட்டு வேலை வாய்ப்பு மாதிரிப் படிவங்களைக் கட்டு...

...டியாவில் உள்ள வீடு ஒன்று சோதனையிடப்பட்டு இருபத்தாறு பாஸ்போர்ட்டுகளும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் நால்வர் கைதாகியுள்ள...

இதேவேளை விமான நிலையத்தில் உள்ள குற்ற விசார (6ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா கட்சிக் கூட்டணிகள் கைச்சின்னத்தை ஏற்கவேண்டும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியுடன் சேரும் எந்தவொரு கட்சியும் ''கை'' சின்னத்தை கூட்டணியின் பொதுச் சின்னமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என இக் கட்சியின்செயற் குழு கேட்டிருக்கிறது.

பதில் எதிர்க்கட்சித் தலைவரான அனுரா பண்டார நாயக்கா இது தொடர்பான ஆலோசனையை செயற் குழு...

...யும், சின்னத்தையும் ஏற்றுக் கொள்ளும் எந்த வொரு கட்சியும் ஸ்ரீ. ல. சு. கட்சியுடன் சேர்த்துக் கொள்ளப்படும் என்று செயற்குழு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

## பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை

மட்டக்களப்புச் சம்பவம் பற்றி நேற்றிரவு பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அதி...

## யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி விவசாயபீடம் செப்டம்பரில் இயங்கும்

(கொழும்பு)

டாம் வீதியில் வீடொன்றில் போதைப் பொருள் வியாபாரம் நடைபெறுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அவ்வீட்டைத் தேடிய பொலிசார் நிலக்கண்ணிவெடி தயாரிப்பதற்கு தேவைப்படும் அல்மீனியம் பவுடர், திரி, 250 மீற்றர் மின் கம்பி ஆகியன கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காக முஸ்லிம் இளைஞர் ஒருவர் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

வெளியிட்டுச் சேவையைக் கொழும்பில் மூடிக்கொள்வது ஒரு தற்செயலான நிகழ்வென்று மன்னிப்புச்சபை லண்டனிலிருந்து வெளியிட்ட செய்தி அறிக்கை ஒன்று கூறுகிறது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

தாய்ச் சங்கம் கிளைகளோடு தொடர்பு கொள்வது வழமையான நிகழ்வாகும். அதற்காக ஒன்றன்பின் ஒன்றாக வந்த இரு நிர்வாகங்களிடமும் அரசாங்க விஸா பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தோம். விஸாவுக்கான விண்ணப்பங்

(6ஆம் பக்கம் பார்க்க)

டன. இதைத்தொடர்ந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இரண்டு வேறுபட்ட மோதல் சம்பவங்களின்போது பதின்நான்கு இராணுவத்தினர் இறந்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சிங்களப் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை முஸ்லிம் வியாபாரிகளைத் தாக்கியதைத் தொடர்ந்து இப் பிரச்சினை ஆரம்பமானது. வியாபாரிகளைத் தாக்கியவர்களை புலிகள் விசாரிக்க வேண்டும் என உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்களை ஒப்படைக்க நேற்றுக் காலைவரை புலிகளால் பொலிஸாருக்குக் கால அவகாசம் கொடுகப்பட்டிருந்தது.

கொடுக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்ததும் மட்

தயில் இருந்து பொலிசார் முழுமையாக வெளியேறினர். இவர்களை விடுதலைப் புலிகள் பாதுகாப்பாக விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்பொலிஸ் நிலைய முற்றுகையின் போது 300க்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா கட்சிக் கூட்டணிகள் கைச்சின்னத்தை ஏற்கவேண்டும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியுடன் சேரும் எந்தவொரு கட்சியும் ''கை'' சின்னத்தை கூட்டணியின் பொதுச் சின்னமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என இக் கட்சியின் செயற்குழு கேட்டிருக்கிறது.

பதில் எதிர்க்கட்சித் தலைவரான அனுரா பண்டாரநாயக்கா இது தொடர்பான ஆலோசனையை செயற்குழு கூட்டத்தில் சமர்ப்பித்தார். கட்சியின் கொள்கைகளையும், சின்னத்தையும் ஏற்றுக் கொள்ளும் எந்த வொரு கட்சியும் ஸ்ரீ. ல. சு. கட்சியுடன் சேர்த்துக் கொள்ளப்படும் என்று செயற்குழு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

### பாதுகாப்பு அதிகாரிகள் ஆலோசனை

மட்டக்களப்புச் சம்பவம் பற்றி நேற்றிரவு பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அதிகாரிகள் பாதுகாப்பு ராஜா

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக் கழக

## கிளிநொச்சி விவசாயபீடம் செப்டம்பரில் இயங்கும்

(கொழும்பு)

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடம் செப்டெம்பர் 30 ஆம் திகதி முதல் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

9 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கும் விவசாய பீடத்திற்குப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்கனவே ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவை வழங்கி இருக்கிறது.

கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன

(6ஆம் பக்கம் பார்க்க)

## போலி பாஸ்போர்ட் விசா மோசடி வர்த்தகர் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

கப்பல் காப்டன் ஒருவரால் வழங்கப்பட்ட போலி வெளிநாட்டு வேலை வாய்ப்பு மாதிரிப் படிவங்களைக் கட்டுநாயக்கா விமான நிலையக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து நாத்தாண்டியாவில் உள்ள வீடு ஒன்று சோதனையிடப்பட்டு இருபத்தாறு பாஸ்போர்ட்டுகளும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் நால்வர் கைதாகியுள்ளனர்.

ஒன்றரை இலட்சம் ரூபாவை பெற்றுப் போலி விஸா வழங்கி வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் பிரபல வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்

கட்டுநாயக்காவிமான நிலையத்தில் பயணம் செய்யவந்தவர் ஒருவரின பார்சல்ஒன்றின் அடிப்பகுதியில் எக்ஸ்றே கருவி மூலம் மூன்று போலிப் பாஸ் போர்ட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதேவேளை விமான நிலையத்தில் உள்ள குற்றவிசார

(6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு ஆயத்தம் எந்தத் தேர்தல் என்றில்லை

தேர்தல் ஒன்றுக்கான பூர்வாங்க வேலைகளை உடன் ஆரம்பிக்கும்படியாழ்மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் எந்தத் தேர்தல் என்ற விபரம் அறிவிக்கப்படவில்லை. இருந்தும் முதலில் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வடமாகாண தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

1983ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டத்தின் 7ஆம் அட்டவணைக்கிணங்க உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்து தமது பதவிகளில் இருந்து இறக்கப்பட்டனர். இதனால் விசேட ஆணையாளர்களின் கீழ் உள்ளூராட்சி சபைகள் நிர்வாகம் நடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கடைசிச் செய்தி

## கும்புறுமுனையில் கடும் சண்டை; இராணுவ முகாமிற்குள் புலிகள்!

(கும்புறுமுனை)

கும்புறுமுனை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று மாலை கடும் சண்டை நடைபெற்றதாகத் தெரிகிறது. இச்சண்டையில் விடுதலைப் புலிகளுக்குச் சில இழப்புக்களும் இராணுவத்துக்குப் பல இழப்புக்களும ஏற்பட்டதாகவும் இதைத் தொடர்ந்து புலிகள் முகாமுக்குள் சென்றுள்ளதாகவும் தொடர்ந்து சண்டை நீடிப்பதாகவும் தெரிகின்றது.

களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் நேற்று முன்னிரவிலும் சண்டை நடைபெற்றதாகவும் இரவு ஒன்பது மணியளவில் களுவாஞ்சிக்குடி, கல்முனை இராணுவ முகாம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்பு வேலைகளுக்கு கனடிய உதவி

(திருக்கோணமலை)

வட-கிழக்கில் 511 பாடசாலைகளின்புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன; இதற்சாக ஆசிய அபிவிருத்தி வங்கி, கனடிய அரசு ஆகியன 25 கோடி ரூபாவை வழங்கியுள்ளன.

மட்டக்களப்பில் 237 பாடசாலை திருக்கோணமலை163, யாழ்ப்பாணம் 63, மன்னார் 28, வவுனியா 26, கிளிநொச்சி 22, முல்லைத்தீவு 22, அம்பாறை 10, பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (67)

நிவாரணக் கொடுப்பனவு

## யாழ். மாவட்டத்துக்கு மேலும் 6 கோடி ஒதுக்கீடு!

(யாழ்பப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறுகைத்தொழில் உதவி நிவாரணமாக குடும்பம் ஒன்றிற்கு ரூபா. 4 000 வீதம் இதுவரை 65,000 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்தொகை கிடைக்கப் பெறாதவர்களுக்கென நாலு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர கடுமையான பாதிப்பிற்குட்பட்டவர்களுக்கென மேலும் இரண்டு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை யாழ். அரசாங்க அதிபர் அவர்கள் தெரிவித்தார். இத் தீர்மானம் மட்டக்களப்பில் கடந்த 9 ஆம் திகதி நடந்த வட, கிழக்குப் புனர்வாழ்வுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அக் கூட்டத்தில் வேறு மாவட்டங்களில் உள்ள பயன் படுத்தப்படாத அரச

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நவீன சந்தையில்

## சுகாதார வசதிகளைப் பேண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தையை சுகாதார வசதிகளுடன் பேணுவதற்கும் ஏனைய வசதிகளை செய்து கொள்வதற்கும் நான்கு கோரிக்கைகளை முன் வைத்து யாழ். நவீன சந்தை வர்த்தக உரிமையாளர் சங்க தலைவர்கள் யாழ் மாநகர

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாநகரசபை

## நீர் வழங்குவதில் லஞ்சம் பெற்ற மூவருக்கு தண்டனை!

(யாழ்ப்பாணம்)

வீடு ஒன்றுக்கு நீர் வழங்குவதில் லஞ்சம் வாங்கிய யாழ் மாநகரசபை நீர்வேலைப் பகுதி ஊழியர்கள் மூவர் தமது குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ளனர்.

வீட்டிற்கு நீர்வழங்கும் போது சரிவர செய்வதாகக் கூறி வீட்டாரிடம் 400 ரூபா பணம் பெற்றுக்கொண்டதை இக் குற்றவாளிகள் மூவரும் உயரதிகாரி ஒருவரின் விசாரணையின்போது ஒப்புக்கொண்டனர்.

மேற்பார்வையாளர் அரசகோன், பொருத்துனர் மங்களதாஸ், சாதாரண தொழிலாளி சூசைதாஸ் ஆகியோரே இவ்விசாரணைக் குட்பட்டோராவர் இவர்களில் ஒருவருக்கு நாநூறு ரூபா தண்டப் பணமும் மற்றுமொருவர் சேவை நீடிப்பு நிறுத்தமும் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## கோதுமை மா நேற்று யாழ்ப்பாணம் வந்தது

(யாழ்ப்பாணம்)

நாநூறு மெட்ரிக் தொன் கோதுமை மா நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தது. இதனால் போதிய அளவு மா, அரிசி என்பன கையிருப்பில் இருப்பதாக யாழ் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். மேலும் காங்கேசன் துறையில் உள்ள களஞ்சிய அறைகளின் திருத்த வேலைகளும் துரித கெதியில் நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ம)

## அமெரிக்க டாலர் பிடிபட்டது

(கொழுப்பு)

சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பிய இலங்கைப் பெண்மணி ஒருவர் ஆயிரத்துஅறுநூற்றி ஐம்பது அமெரிக்க டாலர்களை கடத்தி வந்தமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது.

இவரது கைப்பைக்குள் இவை மறைத்து வைக்கப்பட்டுள்ளதை சுங்க அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

## தமிழ்பகுதி விருத்தி காணாவிட்டால் குற்றவாளிகள் நாங்களே!

-கணேசநாதன்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வு நெறிப்படுத்தல் கூட்டத்திலும் அம்பாறை திருமலை அரச அதிபர்கள் கலந்து கொள்ளவில்லை.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு நகரமண்டபத்தில் பிரதம செயலாளர் திரு. எஸ் கணேசநாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

யாழ், மன்னார், வவுனியா மட்டக்களப்பு, கிளிநொச்சி அரச அதிபர்கள் மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர்கள் உட்பட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புனர் வாழ்வு சமூக நல அமைச்சு செயலாளர் திரு. சரித்தரத்வத்தை, நிறைவேற்று பணிப்பாளர் திரு. ஒஸ்ரின் பெர்னான்டோ, தேசிய புனர்வாழ்வு நெறிப்படுத்தற் குழு இணைப்பாளர் திரு கே.

(6ஆம் பக்கம் பார்க்க)

## முறைசாராக் கல்விப் பிரிவுக்கு நூலகம் அமைக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

முறைசாரா கல்விப் பிரிவுக்கு என நூலகம் ஒன்று அமைக்கும் திட்டம் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் ஆரம்ப நடவடிக்கைகளாக இந்நூலகங்களுக்கு உபயோகிக்கவென தளபாடங்களும், சிறுதொகுதி உள்ளூரில் வாங்கப்பட்ட புத்தகங்களும் வந்தடைந்துள்ளன. இவையனைத்தும் முறைசாரப்பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட நிதியி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ். கன்னியர் மடப் பாடசாலைக்கும் நாச்சிமார் கோவிலுக்குமிடையில் முக்கிய தஸ்தாவேஜீகள் அடங்கிய ஒரு கறுப்புநிற காரியாலய பை (Office Bag) தவறிவிட்டது அதனை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். மே/பா ஈழநாதம், 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

(R/ 354)


## நூல் வெளியீடு

மன்னார் விடத்தற்தீவுக் கொத்தணிக்கு உட்பட்ட பெரியமடு மகாவித்தியாலய ஆசிரியர், மாணவர்களினால் ''மாருதி'' என்னும் சஞ்சிகை அண்மையில் வெளியிடப்பட்டது. ஆசிரியர், மாணவர்களது கவிதை, கட்டுரை, துணுக்குகள் என்பனவற்றைத் தாங்கி இவ்விதழ் காணப்படுகிறது.

முஸ்லிம் இளைஞர்கள்

# ஒற்றுமையை நிலைநாட்ட புலிகளுடன் சேருகின்றனர்

(அம்பாறை)

''தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை நிலை நாட்டவே பல முஸ்லிம் இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் வந்து சேர்ந்துள்ளனர்''

அட்டாளைச் சேனையைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் போராளியான ஏ. எல். எம். அலாவுதீன் (சந்தர்) அவர்கள் அகால மரணமடைந்து இறுதிக் கிரியைகள் அட்டாளைச் சேனை முஸ்லிம் மையவாடியில் நடைபெற்றபோது அன்னாருக்கு அஞ்சலி செலுத்து முகமாக அங்கு நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், பல தீய சக்திகளினால் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் விலகிச் சென்றுள்ளனர். ஆனால் சந்தர் அவ்வாறு செய்யாமல் முஸ்லிம் தமிழ் சமூகங்களின் ஒற்றுமைக்காக தமது கடமைகளை செவ்வனே செய்தார். அவர் மீண்டும் தமிழீழத்தில் பிறக்க வேண்டும் என்றும் கூறினார்.

மற்றும் புலிகள் முக்கியஸ்தர்களான திரு. நியூட்டன், ராம், நீகன் ஆகியோரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (48)

## ஆயுர்வேத வைத்தியசாலைக்கு நன்கொடை

வடக்கு கிழக்கு மாகாண சபையின்கீழ் இயங்கும் பிரதேச சபைகளின் பிரிவுகளுக்குட்பட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு நன்கொடைகளாக மாகாணசபையினால் 1990ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளுக்கு 3,22.000/- ரூபாயும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 34,000/- ரூபாயும் வவுனியா மாவட்டத்திற்கு 16,000/- மன்னார் மாவட்டத்திற்கு43,000/-திருக்கோணமலை மாவட்டத்திற்கு 1,16,000/- அம்பாறை மாவட்டத்திற்கு 26,000/- முல்லைத்தீவு மாவட்டத்திகு 10,000/- நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நன்கொடைகளைக் கொண்டு பிரதேச சபைகள் ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மருந்துகளை கொள்வனவு செய்து தமது வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க முடியும். (19)

## காசோலைகள் வழங்கப்பட்டன

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயலின் போது உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுத் தொகைக்கான காசோலைகள் அண்மையில் திருக்கோணமலைக் கச்சேரியில் வைத்து வழங்கப்பட்டது.

100 குடும்பங்களுக்கு 40 இலட்சம் ரூபாவிற்கான காசோலைகள் அன்றையதினம் வழங்கப்பட்டன. மிகுதியானவர்களுக்கு கட்டம் கட்டமாக நட்டஈடு வழங்கப்படுமாம். (67)

# கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கு ஆலோசனை வழங்க முடிவு

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல மாவட்டங்களிலும் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவிருப்பவர்களுக்கு தேவையான ஆலோசனை வசதிகள் அளிப்பதாக மாவட்ட வியாபார நிலையம் அமைக்க மாகாண கைத்தொழில் அமைச்சு கிராமிய கைத்தொழில் சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து தீர்மானித்துள்ளது.

இத்தகவலை வட-கிழக்கு மாகாண கைத்தொழில் சக்தி வள அமைச்சு செயலாளர் திரு. கே. குணரெத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கைத்தொழிலில் ஈடுபட விரும்பும் தனியாருக்கு ஊக்குவிப்பு, ஆலோசனை, பயிற்சி உட்பட தேவையான உதவிகள் வழங்கப்படுவதே இதன் நோக்கமாகும்.

முதலாவது நிலையம் விரைவில் திருமலையில் திறந்து வைக்கப்படும் என்றார். (37)

## சிரமதானம்

(வவுனியா)

வேலங்குளம் கிராமத்தில் அப்பகுதி மக்களினால் வீதி, மற்றும் பாடசாலைக் காணி போன்றவை சிரமதானம் மூலம் திருத்திஅமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா தெற்கு தமிழ் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பகுதியைச் சேர்ந்த இக் கிராமத்தில் வீதி சீரழிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இருவாரமாக இடம்பெறும் இச்சிரமதான வேலைகளுக்கு அரச அதிபர் மூலமும்,அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (தி)

## திருத்த வேலைகள்

(விசேடநிருபர்)

வண்ணார் பண்ணை மேற்கில் பலவருடங்களாக பழுதடைந்து கிடந்தசிவப்பிரகாசம் வீ திருத்தவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதே வேளை சிவப்பிரகாசம் வீதியில் இருந்து கிளைவிடும் கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, முருகமூர்த்தி வீதிகளும் பல வருடங்களாகக் குன்றும் குழியுமாக இருந்து வருகின்றன.

அவ்வீதிகள் இம்முறைதிருத்தப்படாத முறையில் வேலைகள் நடைபெற்று வருவதை அவதானித்த மக்கள்அதிருப்தி அடைந்துள்ளனர். (21)

## கும்பாபிஷேகம்

உரும்பிராய் பர்வதபத்தினி அம்மன் கோவில் புனராவர்த்தன மஹா கும்பாஷேகம் நாளை (13-6-90) முற்பகல் பத்துமணி அளவில் நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவ ஸ்ரீக.மு.ஜெகநாதக்குருக்கள் தலைமையில் சென்ற வெள்ளிக்கிழமைஆரம்பமாகியது.

## குழாய்கள் பழுதடைந்துள்ளன

(விசேடநிருபர்)

யாழ்.செபஸ்தியார் வீதியிலுள்ள மூன்று தண்ணீர் விநியோகக்குழாய்களும் பழுதடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து யாழ்- மாநகர சபைக்கு பல தடவைகள் அப்பகுதி மக்கள் தெரிவித்தும் எதுவிதநடவடிக்கைகளும் இல்லையாம்.

இதனால் குடிநீர் பெறுவதில் அப்பகுதி மக்கள் கஸ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## சாரணர் பாசறை

(நிந்தவூர்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்தியமகாவித்தியாலயத்தில் சாரணர் பாசறையொன்று அண்மையில் நடைபெற்றது.

சுமார் எழுபது சாரணர்கள் இந்தப் பாசறையில் கலந்து கொண்டனர்.

தேசிய சாரணியப் பயிற்சியாளர் திரு. ரீ. தர்மலிங்கம், உதவி மாவட்ட ஆணையாளர் ஜனாப் எம்.ஐ.எம். முஸ்தபா உட்படப் பலர் இதில் கலந்து கொண்டு சாரணர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

பிரதம அதிதியாக கல்லூரி அதிபர் ஜனாப் எம். ஏ. உதுமா லெவ்வை கலந்து கொண்டார். (53)

## தளபாடங்கள் இல்லை

தம்பிலுவில்- மணல்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நூற்றி எண்பத்தாறு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஆனால், போதிய பாலர் கதிரைமேசை என்பன இல்லாது மாணவர்கள் நிலத்திலிருந்தே தமது கல்வியை மேற்கொள்கின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது.

ஒழுங்கானமுறையில் கிணறு மலசலகூடமும் இங்கு இல்லை இதுபற்றி பல தடவைகள் மேலிடத்துடன் தொடர்பு கொண்டும் எதுவித பலனுமில்லை என பெற்றோர் ஆசிரியர் தெரிவித்தனர்.


அச்சக உரிமையாளர்களே....

உங்களுக்குத் தேவையான

- அச்சுத் தாள் வகைகள்
- போட் (Board) வகைகள்

தரமிக்க

**GRAFO** (கிறாபோ)

மை வகைகள்

காகிதாதிகள் - அலுவலக உபகரணங்கள்
கணக்கியல் பதிவுப் புத்தகங்கள்

அனைத்திற்கும்
யாழ்நகரில் ஒப்பற்ற இடம்.

பெட்டா ஏஜென்ஸீஸ்

**(PETTAH AGENCIES)**

215, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

(B-114)

உங்கள் இல்லங்களை

அழகுபடுத்த...

விருந்தினரை பிரமிக்க வைக்கும்

நவநாகரிக

மர - இரும்பு - உருக்கு

தளபாடங்களின் தேர்வுக்கு

தரமான தயாரிப்பு!
நிதான விலை!!
நீண்ட பாவனைக்கான உத்தரவாதம்!!!

EXPO
FURNISHERS
PRIVATE
LIMITED

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

இன்றுமுதல்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறு
10-30, 2-30, 4-45,
7-00, 9-30
STUART STEEN PEDRO
HUGHES BENARD
GEVRTS
**THE THUNDERING NINJA**
(கராட்டிப் படம்)
சினிமாஸ் கோப்

**லிடோ (யாழ்)**
தினசரி 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30,9-30
**'ALIENS'**
Packed with
Action, Thrill & Suspense
வருகிறது
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
இன்று முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது

06. 06. 90

அலுவலக உபகரணங்கள்
கணக்கியல் பதிவுப் புத்தகங்கள்

அனைத்திற்கும்
யாழ்நகரில் ஒப்பற்ற இடம்.

பெட்டா ஏஜென்ஸீஸ்
(PETTAH AGENCIES)
215, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

(B-1145)



உயர்தரம் எங்கள் தராதரம்...

உங்களுக்குத் தேவையான
எமது தயாரிப்புக்கள்

- குரக்கன்மா
- அரிசிமா
- உழுந்துமா
- கடலைமா
- ஆட்டாமா
- ஐஸிங்சினி
- சியாக்காய் பவுடர்
- கோதுமை அரிசிக்குறுணல்

மற்றும் சுகாதார முறையில் தயாரிக்கப்படும்
உணவுப் பொருட்களுக்கும்..

எம்.ஜீ.எம் ஸ்ரோர்ஸ்
M. G. M. STORES
777, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/1155)


## காசோலைகள் வழங்கப்பட்டன

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம் பெற்ற வன்செயலின் போது உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுத் தொகைக்கான காசோலைகள் அண்மையில் திருக்கோணமலைக் கச்சேரியில் வைத்து வழங்கப்பட்டது.

100 குடும்பங்களுக்கு 40 இலட்சம் ரூபாவிற்கான காசோலைகள் அன்றையதினம் வழங்கப்பட்டன. மிகுதியானவர்களுக்கு கட்டம் கட்டமாக நட்டஈடு வழங்கப்படுமாம். (67)

அவ்வீதிகள் இம்முறைதிருத்தப்படாத முறையில் வேலைகள் நடைபெற்று வருவதை அவதானித்த மக்கள்அதிருப்தி அடைந்துள்ளனர். (21)

## கும்பாபிஷேகம்

உரும்பிராய் பர்வதபத்தினி அம்மன் கோவில் புனராவர்த்தன மஹா கும்பா ஷேகம் நாளை (13-6-90) முற்பகல் பத்துமணி அளவில் நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவ ஸ்ரீக.மு.ஜெகநாதக்குருக்கள் தலைமையில் சென்ற வெள்ளிக்கிழமைஆரம்பமாகியது.

## உயிர் பாதுகாப்பு வாரம் பிரகடனப்படுத்த கோரிக்கை

(கொழும்புத்துறை)

இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம்19ஆம் திகதியில்இருந்து 24ஆம் திகதி வரை உலகஉயிர் பாதுகாப்பு வாரமாகப்பிரகடனப்படுத்தும்படி ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலாளரை யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோரியுள்ளது.

இக் கோரிக்கையின் பிரதிகள் உலக நாடுகளிலுள்ள சகல சமய சமூகநிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனகுரு மகா சந்நிதானத்தின் அருளாணைப்படி இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு.வே.கெ. தனபாலனும் பொதுச் செயலாளர் திரு.இ. தவகோபாலும் அறிவித்துள்ளனர்,

ஐ நா சபைக்கு அனுப்பி வைக்கப்பபட்டுள்ள கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

உலக அமைதிக்கு உயிர் பாதுகாப்பு அவசியமாகும், இதுவே உலக மக்கள் மத்தியில் நிலையான அமைதிக்கு வழிகாட்டுவதாகும். உலகசமயங்கள் யாவும் உண்மைப் பொருளை வெளிப்படுத்தியதினால் உண்டானஅமைதியும் வளர்ச்சியும் பகுத்தறிவாளராகியமக்களை நல்வழிப்படுத்தும் வழிகாட்டிகளை உருவாக்கின.

இதனால் வளர்ச்சி கண்ட மனித சமுதாயம் தகாதமுறைகளைப் பின்பற்றும் போது அவலமாகவும்,அமைதியற்றும் வாழவேண்டி நேரிடும். இந்து சமயக் கருத்துக்கள் அகண்டமாக மக்களை வழிப்படுத்தும் நிலையில் முதன்மை உடையதாகவும் பௌத்த ,கிறிஸ்தவ இஸ்லாமியசமயங்களுக் குமுன்னோடியாகச் சிந்திவெளிக் கலாசாரச் சிறப்பை வெளிப்படுத்தியதினால் உலக அமைதிக்கு வித்திட்டது.

உலக சமய நிறுவனங்கள் உலக உயிர் பாதுகாப்பு வாரத்தில் உலக மக்கள்யாவரும் தாவர உணவுகளை உட்கொள்வதுடன் உயிரினங்களின் மாமிச உணவுகளை நிறுத்துமாறு அன்பாக வேண்டுகின்றோம். உலகமக்களின் சுக வாழ்வுக்குத் தாவர உணவும் பால் உணவும் அவசியமாகும்.எனவே உலகில் கொல்லக் கூடாத விலங்கினமாகப் பசுக்கூட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

உலகில் தோன்றியுள்ள அமைதியின்மையை அகற்றி அமைதியை ஏற்படுத்தவும் உயிரினத்தைப் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகள் சபை ஒக்ரோபர் 19ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை உலகஉயிர் பாதுகாப்பு வாரமாக உலக மக்களுக்கு அறிவிக்க வேண்டும். (24)


### தவறிவிட்டது

கடந்த வியாழக்கிழமை முக்கியமான பொருட்களை உள்ளடக்கிய பி பி.பாக் ஒன்றுகந்தர் மடச் சந்தியில் இருந்து பலாலி வீதி ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேலணை சென்ற வாகனத்தில் இருந்து தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

மே/பா ஈழநாதம் இல:31
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1154)



தரமான தயாரிப்பு!
நிதான விலை!!
நீண்ட பாவனைக்கான உத்தரவாதம்!!!

EXPO
FURNISHERS
PRIVATE
LIMITED

441, K. K. S. Road,
Jaffna.

(B- 1157)


## மரண அறிவித்தல்



### இராமுப்பிள்ளை முத்துலிங்கம்

உரும்பிராய்ச் சந்தியைச் சேர்ந்த திரு. முத்துலிங்கம் 06-06-90 (புதன்கிழமை) காலமானார். அன்னார் திருமதி மு. பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன் (சவூதி), தயாலிங்கம், தயாநிதி, பாக்கியராஜா (கண்ணன் சவூதி), பரமேஸ்வரன் - வரன் (ஜேர்மனி) கலாநிதி (ஜேர்மனி), தயாகரன், (உரும்பிராய் இந்துக் கல்லூரி) அகியோரின் அன்புத் தந்தையும் யோகராணி (முன்னாள் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை, கனடா), சகுந்தலாதேவி, மேரி ஆனந்தன் (கிறீன்லன்ஸ் பாம் உரிமையாளர்), சத்தியநாதன் (ஜேர்மனி), யசோதா (இ. தே. தோ. தொ. சங்கம், கொழும்பு), வேயாபின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜித், திலக், பிரதீப், கௌரி, நந்தனன், சிந்துஜா, நிரோஷ், சஜீவ், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-06-90 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நடைபெறும்.

தகவல்

உரும்பிராய் சந்தி,
உரும்பிராய் தெற்கு.
உரும்பிராய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன
ரோஜா
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
M G R, ஜெயலலிதா,
அசோகன், சுந்தரராஜன்,
பண்டரிபாய், சோ
நடித்த
தேடிவந்த
மாப்பிள்ளை
(புதிய பிரதி)

ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
மௌனராகம்
குறிப்பிட்ட சில தின்ங்கள்
மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்


## வட்டக்கிளைக் கூட்டம்

(அம்பாறை மாவட்ட நிருபர்)

அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வட்டக்கிளைகள் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இம்மாதம் பதினான்காம் திகதி காலை பத்துமணிக்கு அம்பாறை மாவட்டத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

மக்கள் முன்னணி மாவட்டக் கிளை உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள். கிளைத்தலைவர்கள், செயலாளர்க , பொருளாளர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டுமென மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்றோ கேட்டுள்ளார்.

# A/L இரசாயனம்

## பரீட்சை மாதிரி வினாக்களும் விடைகளும்

## பொது இரசாயனம் - அசேதன இரசாயனம்

அமைப்பு வடிவ வினாக்கள்

## தொடர் -3

## சத்தீஸ்

### பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2 (தொடர்ச்சி)

(ஒவ்வொரு வினாக்களுக்கும் மொத்தம் 100 புள்ளிகள்)

2. (அ) (i) M என்னும் ஒரு உலோகத்தின் குளோரைட்டொன்றின் 0·2667 கிராம் நீரில் கரைக்கப்பட்டு ஐதான $HNO_3$ இருக்கையில் $AgNO_3$ உடன் வீழ்படிவாக்கப் பட்ட AgCl இன் நிறை 0·8607 கிராம் M இன் இரசாயனச் சமவலுவைக் கணிக்க?
(Cl=35·5, Ag=108) (15 புள்ளி)

(ii) M இன் தன்வெப்பம் 0·924 J / k / g எனின் M இன் சார்பு அணுத்திணிவைக் கணிக்க? (15 புள்ளி)

(iii) M ஒரு தாண்டல் மூலகமா? அல்லது தாண்டலற்ற மூலகமா எனக் கூறுக? உமது விடைக்கான காரணங்களைத் தருக? (10 புள்ளி)

(iv) M இன் குளோரைட்டின் சூத்திரம் என்ன? (05 புள்ளி)

(v) ஆவி நிலையில் M இன் குளோரைட்டின் சார்பு மூலக்கூற்றுத்திணிவு 265 எனக் காணப்பட்டது. ஆவிநிலையில் குளோரைட்டின் தன்மையைப் பற்றி நீர் என்ன கூறமுடியும்? (கட்டமைப்பையும் சுட்டிக் காட்டுக) (15 புள்ளி)

(vi) M இன் குளோரைட்டு $(CH_3)_2NH$ உடன் தாக்கமுறும்போது அநேசமாக உண்டாகக் கூடிய விளைவுகளின் கட்டமைப்புகளைத் தருக? (15 புள்ளி)

(ஆ) KI செறிந்த $H_2SO_4$ ஐத் தாக்கி $I_2$, $SO_2$, $K_2$, $SO_4$ என்பவற்றை விளைவாக்கும். இத்தாக்கத்தினை ஒட்சியேற்றல் எண் கொள்கையைப் பயன்படுத்திச் சமப்படுத்துக? (25 புள்ளி)

### பரீட்சை மாதிரி வினாத்தாள் 2 இன் விடைகள்

விடை (1)

(அ) (i) (1) E (2) EO, $E_2O$ (3) $3d^5$ $4S^2$

(ஆ) (i) D or E

(ii) எதிர் அயன் $DO_4^-$ or $ECl_4^{2-}$
நேர் அயன் $D^{2+}$ or $E^{2+}$

(இ) (i) K; $S^2P^6$ என்னும் அமைப்பு, சேர்வைகளை ஆக்க முடியாது. தனி அணுக்களாகக் காணப்படும் அவற்றுக்கிடையே வலிமை குறைந்த வந்தர்வால் கவர்ச்சி விசைகள் மட்டும் காணப்படும். உடைக்சக் குறைந்த சக்தியே போதுமானது.
(இவ்விடையின் வினாவில் A → F என்பதை A — K என மாற்றுக)

(ii) J; உருகுநிலை, கொதிநிலை குறைந்த மூலகங்கள் ஆவர்த்தன அட்டவணையில் வலப்பக்கத்தில் காணப்படும். ஆகவே அலசனாக அல்லது அருவாயுவாக இருக்கலாம் அறைவெப்பநிலையில் நிறமானது. எனவே அருவாயு அல்ல அலசன் ஆகும்.

(ஈ) (i) H (ii) $H_2O_3$

(உ) B, J, B, எல்லாவற்றிலும் மின் எதிர் இயல்பு குறைந்தது J மின் எதிர் இயல்பு கூடியது. ஆகவே மின் எதிர் இயல்பு வித்தியாசம் அதிகம் கூடிய அளவு அயன் தன்மையைக் காட்டும்.



# பொலிஸ் துப்பாக்கிச்சூடு கொலைகள்

# சர்வதேச மன்னிப்புசபை கண்டனம்

(லண்டன்)

பாகிஸ்தானில் கடந்த மாதம் இடம் பெற்ற இனக் கலவரங்களின் போது சிந்து மாகாணத்தில் பொலிஸாா நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் கொல்லப் பட்ட சம்பவம் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை (அம்னஸ்ரி இன்ரனாஷனல்) கண்டனம் தெரிவித்துள்ளது.

நான்கு பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தையும் இச் சபை கண்டித்துள்ளதுடன், சிந்துமாகாண அரசுக்கு இது தொடர்பான ஆட்சேபனைக் கடிதத்தையும் அனுப்பிவைத்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள முகாஜியர்களுக்கு எதிரான அட்டூழியங்கள், அடக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிராக விசாரணை நடாத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், மனித உரிமைகள் அமைப்புக்கும் புகார்சள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த இனக்கலவரங்ளால் கராச்சியிலும், ஹைதராபாத்திலும் நானூறு பேர்வரை சொல்லப்படட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதே சமயம் இங்கு இனக் கலவரங்களை அடக்கி சட்டம் ஒழுங்கை ஏற்படுத்த அனுப்பப்பட்ட பாகிஸ்தான் படையினர், நூற்றுக்கு மேற்பட்டவர்களை சந்தேகத்தின் மீது கைதுசெய்துள்ளனர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தற்பொழுது அங்கே அமைதி நிலவுவதாகவும் அறிவிக்கப் படுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ கராச்சியில் சட்டம் ஒழுங்கு நிலமைகளை அவதானிக்க சட்ட அமைச்சருடன் கராச்சிக்கு சென்றுள்ளார்.

## சீ. ஐ. ஏ. நடவடிக்கையால் மண்டேலா கைதானார்

### கொன்ஸ்ரிரியூசன் பத்திரிகை தகவல்

(அட்லாண்டா)

ஆபிரிக்க தேசிய சாங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா 1962 இல் தென்னாபிரிக்காவில் கைதானதற்கு அமெரிக்க உளவு நிறுவனமான சீ. ஐ. ஏ. காரணம் என்று இங்கிருந்து வெளியாகும் கொன்ஸ்ரிரியூசன் என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

சீ. ஐ. ஏ. சொடுத்த தகவல் ஒன்றையடுத்தே திரு மண்டேலாவை தென்னாபிரிக்க பொலிஸார் கைதுசெய்ததாக ஓய்வுபெற்ற சீ. ஐ ஏ. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தான் பகுதி காஷ்மீரில் சட்டசபை தொகுதி தேர்தல்

(கராச்சி)

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட காஷ்மீர்ப் பிரதேசத்தில் 39 ஆசனங்களைக் கொண்ட சட்டசபையின் ஒரு தொகுதிக்கு மீண்டும் புதிதாக தேர்தல் நடத்த வேண்டும் என நீதிமன்றத்தில் தீர்ப் பளிக்கப்பட்டது.

இதனால் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோவின் ஆதரவாளர்கள் அதிகாரத்தைப் பொறுப்பேற்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தற்பொழுது பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், அகில ஜம்மு காஷ்மீர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தலா பதினாறு ஆசனங்களைக் கைப்பற்றி இருக்கின்றன.

இதேசமயம் தகிரீட் இளியமல் கட்சியின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மொகமட் கயாப்கான் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவை சந்தித்து புதிய அரசாங்கத்தை அமைக்க தமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

## 44 வருட இடைவெளிக்குப் பின்

## சேக்கோஸ்லாவாக்கியா தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி

(பராக்)

நாற்பத்திநான்கு வருடகால இடைவெளிக்குப் பின்னர் செக்கோஸ்லாவாக்கியாவில் நடைபெற்ற முதலாவது சுயேட்சையான பாராளுமன்றத் தேர்தலில் சிவிக் போரம் இயக்கம் பெரும்பான்மை இடங்களைக் கைப் பற்றியுள்ளது.

முன்னூறு பேர் உள்ள சமஷ்டி சட்டப் பேரவையில் நூற்றி எழுபது இடங்களை செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி வாக்லாவ் ஹவெல் தலைமையிலான சிவிக் போரம் இயக்கம் கைப்பற்றியது.

இத்தேர்தலில் ஐம்பது சதவீத வாக்குகள் சிவிக போரம் அமைப்புக்குக் கிடைத்துள்ளதாக தேர்தல் அதிகாரிகள் கூறினார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு பதின் மூன்று சதவீத வாக்குகளும், மூன்று கட்சி கிறிஸ்தவ ஜனநாயக முன்னணிக்கு பதினொரு சதவீத வாக்குகளும் கிடைத்தன.

## உலககிண்ணகால் பந்துபோட்டி அமெரிக்கா தோல்வி

(மிலான்)

இத்தாலியில் நடைபெறும் உலக கிண்ணத்துக்கான கால் பந்துப் போட்டியில் மேற்கு ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, பிறேசில் ஆகியனமுதல் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன.

'சீ' பிரிவு போட்டியில்பிறேசில் அணி சுவீடன் குழுவை 2 : 1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

'பீ' பிரிவு போட்டியில் மேற்கு ஜேர்மனி யூகோஸ்லாவியாவை 4: 1 என்ற கோல் கணக்கில் வென்றது.

'ஏ' பிரிவு போட்டியில் செக்கோஸ்லாவாக்கியா அமெரிக்காவிடம் 5 :1 என்றகோல் போட்டு வென்றது.

## வட கொரியாவுக்கு ரஷ்யா எரிபொருள் நிறுத்தம்

(சோல்)

தென் கொரியாவுக்கும் — சோவியத் யூனியனுக்கும் இடையிலான உறவு மீண்டும் ஆரம்பமானதால் சோவியத் யூனியன் வட கொரியாவுக்கு எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியுள்ளது என தென் கொரிய தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

அமெரிக்க உச்சி மாநாட்டின் பின்னர் சோவியத் ஜனாதிபதியும் தென்கொரிய ஜனாதிபதியும் சான்பிரான்ஸிஸ்கோவில் சந்தித்து பேசியதையடுத்தேஇந்தநடவடிக்கை ஏற்பட்டது.

கம்யூனிஸ்ட் நாடான வட கொரியாவுக்கு எரிபொருள் ஆயுதங்கள் மற்றும் முக்கிய பொருட்களை சோவியந் யூனியன் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(ii) எதிர் அயன் $DO_4$ or $ECl_4$
நேர் அயன் $D^{2+}$ or $E^{2+}$

(இ) (i) K; $S^2P^6$ என்னும் அமைப்பு, சேர்வைகளை ஆக்க முடியாது. தனி அணுக்களாகக் காணப்படும் அவற்றுக்கிடையே வலிமை குறைந்த வந்தர்வால் கவர்ச்சி விசைகள் மட்டும் காணப்படும். உடைக்கக் குறைந்த சக்தியே போதுமானது.
(இவ்விடையின் வினாவில் A → F என்பதை A — K என மாற்றுக)


(ii) J; உருகுநிலை, கொதிநிலை குறைந்த மூலகங்கள் ஆவர்த்தன அட்டவணையில் வலப்பக்கத்தில் காணப்படும். ஆகவே அலசனாக அல்லது அருவாயுவாக இருக்கலாம் அறைவெப்பநிலையில் நிறமானது. எனவே அருவாயு அல்ல அலசன் ஆகும்.

(ஈ) (i) H (ii) $H_2O_3$

(உ) B, J, B, எல்லாவற்றிலும் மின் எதிர் இயல்பு குறைந்தது J மின் எதிர் இயல்பு கூடியது. ஆகவே மின் எதிர் இயல்பு வித்தியாசம் அதிகம் கூடிய அளவு அயன் தன்மையைக் காட்டும்.



(ஊ)



(ii) ஒரு மூல அமிலம் — இருமூல அமிலம் — மும்மூல அமிலம்
I இன் Ox எண்: +1, +3, +5

(எ) B, B இன் ஐதரைட்டின் உருகிய கரைசல் மின்பகுக்கப்படும். $B^+H^- \rightarrow B^+ + H^-$
கதோட் : $B^+ + e \rightarrow B$, அனோட் : $2H^- - 2e \rightarrow H_2$

(ஏ) (i) K இன் 1ம் அயனாக்கற் சக்தி மிகவும் உயர்வானது.
(ii) C இன் அடுத்தடுத்த அயனாக்கற் சக்திகளைத் துணியும் போது 3ம் அயனாக்கற்சக்தி திடீரென அதிகரிக்கும்.

விடை (2)

(அ) (i) 0·8607 g AgCl இலுள்ள குளோரினின் திணிவு, $W_{Cl_2} = \frac{35{\cdot}45 \times 0{\cdot}8607}{(108 + 35{\cdot}5)} = 0{\cdot}2127\ g$

$\therefore W_m = 0{\cdot}2667 - 0{\cdot}2127 = 0{\cdot}0540\ g$

35·5 g குளோரினுடன் சேரும் M இன் திணிவு சமவலுத்திணிவு $E_m$ ஆகும்.

$\therefore E_m = \frac{0{\cdot}054 \times 35{\cdot}5}{0{\cdot}2127} \simeq 9{\cdot}00\ g$

(ii) அண்ணளவான சா. அ. தி. × தன்வெப்பம் = அணுவெப்பம்
$\simeq A \times S = 26{\cdot}8$

$\therefore$ அண்ணளவான சா. அ. தி. $= \frac{26{\cdot}8}{S} = \frac{26{\cdot}8}{0{\cdot}924} \simeq 29$

வலுவளவு (V) $= \frac{\text{அண்ணளவான சா. அ. தி. (A)}}{\text{சமவலுத்திணிவு (E)}}$

$V = \frac{A}{E} = \frac{29}{9} \simeq 3$

$\therefore$ திருத்தமான சா. அ. தி. $= E \times V = 9{\cdot}00 \times 3 = 27$

(iii) M தாண்டல் அற்ற மூலகம் காரணம் M இன் சா. அ. தி. 27 ஆதலால் இதன் அணுஎண் < 20 (இதன் அணுஎண் அனேகமாக 13 or 14)

(iv) $MCl_3$


(v) ஆவிநிலையில் சூத்திரம் $(MCl_3)_n$ என்க.

$(MCl_3)_n$ = சூத்திர நிறை = சா. மூ. தி.

$(27 + 35{\cdot}5 \times 3)_n = 265$

$\therefore n = 2$

எனவே ஆவிநிலையில் இரு மூலக் கூறுகள் இணைந்து ஈரிணை மூலக் கூறாகக் காணப்படும்.



(தொடரும்)

நூற்றி எழுபது இடங்களை செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி வாக்லாவ் ஹவெல் நாயக முன்னணிக்கு பதினொரு சதவீத வாக்குகளும் கிடைத்தன.

# உலககிண்ணகால் பந்துபோட்டி அமெரிக்கா தோல்வி

(மிலான்)

இத்தாலியில் நடைபெறும் உலக கிண்ணத்துக்கான கால் பந்துப் போட்டியில் மேற்கு ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, பிறேசில் ஆகியனமுதல் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன.

'சீ' பிரிவு போட்டியில்பிறேசில் அணி சுவீடன் குழுவை 2 : 1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

'டீ' பிரிவு போட்டியில் மேற்கு ஜேர்மனி யூகோஸ்லாவியாவை 4: 1 என்ற கோல் கணக்கில் வென்றது.

'ஏ' பிரிவு போட்டியில் செக்கோஸ்லாவாக்கியா அமெரிக்காவிடம் 5 :1 என்ற கோல் போட்டு வென்றது.

பூட்டோவின் பாகிஸ்தான் ... ளார்.

# வட கொரியாவுக்கு ரஷ்யா எரிபொருள் நிறுத்தம்

(சோல்)

தென் கொரியாவுக்கும் — சோவியத் யூனியனுக்கும் இடையிலான உறவு மீண்டும் ஆரம்பமானதால் சோவியத் யூனியன் வட கொரியாவுக்கு எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியுள்ளது என தென் கொரிய தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

அமெரிக்க உச்சி மாநாட்டின் பின்னர் சோவியத் ஜனாதிபதியும் தென்கொரிய ஜனாதிபதியும் சான்பிரான்ஸிஸ்கோவில் சந்தித்து பேசியதையடுத்தேஇந்தநடவடிக்கை ஏற்பட்டது.

கம்யூனிஸ்ட் நாடான வட கொரியாவுக்கு எரிபொருள் ஆயுதங்கள் மற்றும் முக்கிய பொருட்களை சோவியந் யூனியன் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப் பண்டித, பால பண்டித பரீட்சை முடிவுகளின் விபரம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தினால் சில மாதங்களின் முன் நடாத்தப்பட்ட தமிழ்ப் பண்டித, பால பண்டித பிரவேச பண்டித பரீட்சைகளின் பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

பண்டித பரீட்சையில் வட்டுக் கோட்டையைச் சேர்ந்த திரு. ந. கடம்பேஸ்வரன் என்பவர் சித்தியடைந்துள்ளார். பால பண்டித பரீட்சையில் இரண்டாம் தரத்தில் திரு. க. சிவகரன் (இருபாலை) சொ. வாசுகி நாயன்மார்க்கட்டு இ. உமாராணி(யாழ் நாச்சிமார் கோவிலடி) ஆகிய மூவரும் சித்தியடைந்துள்ளனர். திரு. க. வைரமுத்து (மட்டுவில) மாணவர் நூன சித்தியை பெற்றுள்ளார்.

பிரவேச பரீட்சையில் வட மாகாணத்தில் உள்ள 15 கல்லூரிகளில் இருந்து 151 உயர் வகுப்பு மாணவர்கள் பங்கு பற்றினர். இவர்களில் 6பேர் முதலாம் தரத்திலும் 15பேர் இரண்டாம்தரத்திலும்40 பேர் மூன்றாம் தரத்திலும் சித்தியடைந்திருக்கிறார்கள்20 பேர் சில பாடங்களில் சித்திக்கு வேண்டிய புள்ளி பெறாமையினால் அப்பாடங்களில் மாத்திரம் மீண்டும் தோற்றவேண்டிய நூன சித்தியைப் பெற்றுள்ளனர்.

தமிழ்ப் பிரவேசப் பரீட்சை முதலாம் தரத்தில் சித்தி பெற்றோர் பா. மகாலிங்கசிவம் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) ரு. சூரியயாழினி (வட்டு இந்துக் கல்லூரி)சி. சிவதர்சினி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) பெ. சத்தியவதனி (இளவாலை கன்னியர் மடம்) வே. சுஜாதா (கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி) கா. ருச்மணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாவது தரத்திலும் மூன்றாம் தரத்திலும் சித்தி பெற்றோர் (இளவாலை கன்னியர் மடம்) பொ. 'ரஜனி அ அமலராஜேஸ்வரி ம வதனா (உரும்பிராய் இந்துக்கல்லூரி) க. சசிகலா க. ஜெயந்தினி (கட்டை வேலி ஞானசாரியார் கல்லூரி) வி. சிவமங்கை ஈ. ஜெயக்குமாரி கா. பூபதி (கரவெட்டி திரு இருதயக் கல்லூரி) சி. பரமேஸ்வரி கொக்குவில் இந்துக் கல்லூரி) மா. மீனாம்பிகை த. தர்சினி, சி சந்திரலீலா, சி, ஜெயந்தினி, கோ ரமேஸ்சர்மா, கு குணேஸ்வரி இ. பவவதனி. வி. விக்னேஸ்வரி, ந. சந்திரப்பிரபா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ப. குணமணி, சி. ஜெயநிதி, (சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்) பா. மதிவதனி சி. மதனா, லோ. சினேகலதா (சுண்ணாகம் இராமநாதன்கல்லூரி)ப. கலைச்செல்வி ந. லலிதா பத்மினி, ச. நிரஞ்சலா ந. டர்மளா இ. துஷ்யந்தி சி சுகசாந்தி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) மா. பிறேமலேஜினி.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி வை. பாலச்சந்திரா, சி. சுதர்ணகலா வி. வசந்தகுமாரி, (பூநகரி மகா வித்தியாலயம்) ச சிறீஸ்கந்தநாயகி, வ. சிவநாயகி சி. ஹேமலதா, க. மங்களேஸ்வரி, ந. சிவமலர், சி. மஞ்சுளா (மீசாலை விக்னேஸ்வராக்கல்லூரி) கு. கலைவாணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ப. கலாசுசி, தி. திருமகள், தி. ஞானசுந்தரி, அ. சாந்தநாயகி, நா. சிவநந்தினி (வட்டு இந்துக் கல்லூரி) ஆ. லதா, வா. நேசரஜனி ம. அனுராதா.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள்பா குமுதினி(துன்னாலை) சு.சரோஜினிதேவி(கரவெட்டி க. இராஜசுலோசனா (கரவெட்டி) சி. சிவமலர் (கரவெட்டி) வே. கலைவதனி (அல்வாய்) ந. இளமதி (இணுவில்) இ. சுப்பிரமணியசர்மா (நவாலி) (24)

# கட்டிட வசதியின்மையால் மாணவர் அவதி

(நிந்தவூர்)

நிந்தவூர் இமாம்றூமி வித்தியாலயத்தில் நிலவும் இட நெருக்கடி குறித்து பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதிய வகையில் கட்டிட வசதி இன்மையால் மரநிழல்களிலும் வகுப்புக்களை நடத்த வேண்டிய அவலம் ஏற்பட்டு வருகின்றன.

அத்துடன் இடநெருக்கடி காரணமாக இந்த வித்தியாலயத்தில் 6 ஆம் ஆண்டு வகுப்பை ஆரம்பிக்க முடியாத நிலையும் நீடித்து வருகின்றது.

இதேவேளை இங்கு அமைக்கப்பட்டுள்ள மூன்று கட்டிடங்களுள் ஒரு கட்டிடத்தின் கூரை எந்த நிமிடமும் இடிந்து விழும் நிலையிலிருப்பதாகவும் பெற்றோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இக்கட்டிடம் கட்டப்பட்ட போது கூரைக்குப் போடப்பட்ட மரங்கள் தற்பொழுது சேதமடைந்து காணப்படுவதாலேயே எந்நேரமும் கூரை இடிந்து விழலாமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நீண்ட பல வருடகாலமாக இந்த வித்தியாலயத்தில் எவ்வித சிறுதிருத்த, பெருந்திருத்த வேலைகளும் செய்யப்படவில்லை எனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் இந்த வித்தியாலயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் இனியாவது கவனம் செலுத்தமாட்டார்களா? என பெற்றோர் அங்கலாய்க்கின்றனர். (53)

# நூல் வெளியீடு

அருட்கவியரசு சீ. விநாசித்தம்பப்புலவர் பாடிய ''ஸ்ரீநாகவரத நாராயணர் பிள்ளைத் தமிழ்'' நூல் வெளியீடு இம் மாதம் 24 ஆம் திகதி அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

ஆலயத்தில் நடைபெறும் மணவாளக் கோலவிழாவில் நூல் நயத்தை தங்கம்மா அப்பாக்குட்டி, இ. ஜெயராஜ் கனகசபாபதி நாகேஸ்வரன், கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் செய்வர்.

பிள்ளைத்தமிழ்ப்பாக்களை யாழ்-சங்கீதக்கல்வி அதிகாரி திரு.எஸ் கணபதிப்பிள்ளை பாடுவார். (21)

# வருடாந்த உற்சவம்

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருந்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் 8ஆம் திகதி 8- 6- 90 கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 16ஆம் திகதி தேர் உற்சவமும் 17ஆம் திகதி தீர்த்த உற்சவமும் 18ஆம் திகதி சண்டேஸ்வரர் உற்சவமும் இடம் பெறவுள்ளது.

## நஞ்சருந்தி மரணம்

(முல்லைத்தீவு)

புதுக்குளத்தைச் சேர்ந்த திருமதி கீர்த்திதேவன் கோமாவது எனும் 23 வயதுடைய பெண் கிருமிநாசினி அருந்தி மரணமானார்.

உணவு சமைப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டதாக குறை கூறிய கணவனுடன் வாழ முடியாது என்று கூறிய அப்பெண்மணி கிருமிநாசினி அருந்தி மரணமானார். அண்மையில் ஆஸ்பத்திரி இல்லாததனால் இவரை உடனடியாக காப்பாற்ற முடியவில்லையென அயலவர்கள் கூறினர். (58)

## காணிப்பதிவகத்தின் வருமானம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காணிப் பதிவகம் கடந்தவருடம் முத்திரைகள் மூலம் 1 இலட்சத்து 71 ஆயிரத்து 703 ரூபா 25சதம் வருமானம் பெற்றுள்ளது.

அதேநேரம் இலங்கையர் அல்லாதோர் வாங்கிய காணிகள் மூலம் 1 இலட்சத்து 20 ஆயிரம்ரூபா வருமானம் பெற்றுள்ளது. (37)

# எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் காலம்

--மூர்த்தி

(கிளிநொச்சி)

எமது இளஞ் சமுதாயம் கெட்டுப்போகவும், அவர்களின் கல்வி கெட்டுப்போகவும், எமது கலாசாரம் சீரழிந்து போகவும் இன்றைய தமிழ் சினிமாப் படங்கள் உதவுகின்றன. ஆதலால்தான் 'வீடியோ' படக்காட்சிகளைத் தடைசெய்தோம்.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற தொழிற்சங்கம் சம்பந்தமான கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ப. மூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்க அமைப்பாளர் திரு ஸ்ரீ அன்பன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. மூர்த்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

அரசு புலிகள் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பேச்சுவார்த்தையின் முடிவில்தான் எமக்கு நிரந்தர அமைதி கிடைக்குமா என்பதைக் கூற முடியும். இன்றைய அமைதி நிலையானதல்ல. நிச்சயமாக எதிர்கால தமிழ் ஈழம் எமது கையில்தான். இதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. அதற்குத் தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு எமக்குத் தேவை.

எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் காலம் இது. அதை விடுத்து கடவுளின்மேல் பாரம் போட்டுவிட்டு கோவிந்தா என்று இருக்கும் காலம் இதுவல்ல.

திறமையும், ஆற்றலும், அறிவும் உடையவர் எமது தலைவர் பிரபாகரன். அவரின் திறமையான வழி நடத்தலினால் உலகில் பெரும் சாதனைகளை நாம் சாதித்துள்ளோம். அவரை எமது தலைவராகப் பெற்றதனால் நாம் பெருமைப்படுகிறோம். அவரின் வழிகாட்டலில் சகல தமிழ் இனம் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்துவதன் மூலம்தான் நாம் எமது அடிமைத் தளையை உடைத்தெறிந்து சுதந்திர மனிதர்களாக வாழமுடியும்.

தென் பகுதியிலுள்ள தொழிற்சங்க தலைமைகளை நம்பி எமது தொழிலாள வர்க்கம் ஏமாந்துவிட்டது. தொடர்ந்தும் அந்தநிலை ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும். எமது தொழிலாளர்களின் தலைவிதியை நிர்ணயிக்க எல்லோரும் எமது தொழிற்சங்கத்தில் இணைந்து போராட வேண்டும் என்றார். (49)

## அபிவிருத்திச் சபை உறுப்பினர் தெரிவு

(தீவுப்பகுதி)

வேலணை அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபையின் புதிய செயலாளராக டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

புதிய தலைவராக சமாதான நீதவான் திரு வா. தவச்செல்வமும் உபதலைவராக ஒய்வு பெற்ற ஆசிரியை திருமதி தி. பத்துமாவதியும், உபசெயலாளராக திரு. கு. சண்முகலிங்கமும், பொருளாளராக திரு அ. அருந்தவநாயகமும் தெரிவு செய்யப்பட்டனர்.

பன்னிரெண்டு பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது. இந்தச் சபையின் போசகர்களாக டாக்டர் அ. திருநாவுக்கரசுவும் வேலணை கொத்தணி அதிபர் திரு. பொ. கேதாரநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். (15)

## பஸ்சேவை சீரில்லை மாணவர் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா டிப்போவிற்குரிய பூவரசன்குளம் - இரணை இலுப்பைக்குளம் பஸ்சேவை சீராக இயங்குவதில்லை. இதன் காரணமாக பூவரசன் குளம் கொத்தணி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் மாணவர்கள் உட்பட பல பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் கஷ்டநிலை அடைந்துள்ளனர் என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவையில் ஈடுபடும் பஸ் பழுதடைந்து காணப்படுவதாகவும், இந்த பஸ் சீரற்று சேவையில் ஈடுபடுவதால் இரணை இலுப்பைக்குளம், கோவில் புளியங்குளம், செங்கல்படை கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பூவரசன் குளம் பாடசாலை சென்று கல்வி கற்பதில் சிரமமடைந்திருக்கிறார்கள் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மாணவர் பஸ் சேவை சீரில்லாத காரணத்தினால், நேரத்திற்கு உணவு உண்ண முடிவதில்லை என்றும், இதனால் சில மாணவர்களுக்கு குடல்புண் (அல்சர்) நோய் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொறுப்பு வாய்ந்தவர்கள் மேற்படி பஸ் சேவையில் அக்கறை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட கிராமவாசிகள் தெரிவித்தனர். (தி)

## சின்னம் சூட்டு விழா

(நிந்தவூர்)

கல்முனைக்குடி அல்-பஹ்ரியா வித்தியாலய சாரணர்களின் சின்னம் சூட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

சாரணர் தலைவர் ஜனாப் எம். எச். எம். மன்சூர் தலைமையில் விழா நடைபெற்றது.

உதவி மாவட்ட சாரண ஆணையாளர் ஜனாப்.எம். ஐ.எம். முஸ்தபா விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். (53)

## சூழல் பாதுகாப்பு குறித்து மாணவர் அறிய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சூழல் சுற்றடால் பாதுகாப்பு குறித்து மாணவர்கள் அறிந்திருப்பது அவசியம். மாசடைந்து வரும் சூழலிலிருந்து மனித குலம் மீட்சியடைவதற்கு மாணவர்கள் இன்று முதலே திட சங்கற்பத்துடன் முயற்சி செய்ய வேண்டும்.

இவ்வாறு யாழ். சம்பந்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா .ஜி. ஏ. பிரான்ஸ்சிஸ் யோசப் அடிகள் குறிப்பிட்டார் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் தின விழா கடந்த 5ஆம் திகதி சம்பந்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றபோது அதற்கு தலைமை வகுத்துப் பேசுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா மரம் நாட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

ஐக்கியநாடுகள் சங்க யாழ். கிளைத் தலைவர் கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன், ஆசிரியர் திரு.வி. குகாதரன், கலாநிதி,ஏ.எம்.ரி. சவரிமுத்து திரு.எஸ்ஜே.பி.ரட்ணதுரை திரு சி.கே. எஸ். குகதாஸன் ஆகியோர் சூழல்சுற்றாடல்குறித்து உரையாற்றினர்.

சுற்றடல் தினம் குறித்து மாணவர்களின் சுவரொட்டிப் போட்டி, வில்லுப்பாட்டு, நாடகம் என்பனவும் இடம் பெற்றன.

## மகோற்சவம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்கு காட்டுத்தறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் நாளை (13-6-90) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

புதனன்று தொடங்கும் மகோற்சவம் 22ஆம் திகதி தீர்த்தத்துடன் இனிது நிறைவேறும்.

## கப்பல் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் தொகை தற்போது அதிகரித்துள்ளது. மாதம் நூறு கப்பல்கள் வரை இங்கு வருகின்றன என்று துறைமுக கப்பல்துறை அமைச்சர் ரூபா கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கடந்தவருடம் இங்கு சுமார் நாற்பது கப்பல்களே வந்தன என்றும் அவர் கூறினார்.

துறைமுகத்தில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக சீமெந்து, உரம் ஏற்றிவந்த கப்பல்களில் கடந்தஇருமாதங்களில் தாமதம் ஏற்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

## பிராந்திய முகாமையாளர் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

தென்னை அபிவிருத்திச் சபையின் வட பிராந்திய முகாமையாளராக ஒருவர் மட்டுமே இருந்து வருவதால், வட பிரதேசத்தில் தென்னை அபிவிருத்தி குன்றி காணப்படுகிறது.

ஏனைய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு பிராந்திய முகாமையாளர் என்ற ரீதியில் பிராந்திய முகாமையாளர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களின் கீழ்பல தென்னை பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் பலர் கடமையாற்றி வருகின்றனர். அதனால் அம் மாவட்டங்களில் தென்னைப் பயிர்ச் செய்கைக்கு மக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் பொதுவில் ஒரே ஒரு பிராந்திய முகாமையாளர் மட்டுமே இருந்து வருகிறார்.

ஐந்து பேருடைய கடமையை ஒருவர் மட்டுமே பார்த்துவருவதால், அவருக்கு வேலைப்பழு அதிகமாக இருந்து வருகிறது. இதனால் பல அபிவிருத்தி வேலைகள் செய்ய முடியாது இருந்து வருகிறது. (49)

## கிரிக்கெட் போட்டி

(யாழ் விளையாட்டு நிருபர்)

சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் டொனல்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியை ஜூன்மாதகடைசியில் நடாத்தவுள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (42)


யாழ்ப்பாண மாநகர சபை


## அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் மதுவரிச் சட்ட விதிமுறைகளினாலும் மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளினாலும் விபரிக்கப்பட்டுள்ளனவயான (மதுபரிமாறப்படும்) விளையாட்டுக்கழகங்கள், மதுபானச்சாலைகள், மதுபானக்கடைகள் ஆகியவற்றுக்கு 1990 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரமெதுவும் வழங்கப்படவில்லையெனவும், 1989 ஆம் ஆண்டு சம்பந்தமாக வரி செலுத்திய மேற்குறித்த எத்தகைய அமைப்புக்களினதும் அனுமதி 1989 மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவு பெற்றுவிட்டதென்றும் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(B/ 1153)

4ஆம் ஆண்டு

நினைவஞ்சலி

நடைபெற்றபோது அதற்கு தலைமை வகுத்துப் பேசுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா மரம் நாட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

ஐக்கியநாடுகள் சங்க யாழ். கிளைத் தலைவர் கலாநிதி

பண்ணை மேற்கு காட்டுத்தறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப்பிள்ளையார் கோவில் மகோற்சவம் நாளை (13-6-90) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

புதனன்று தொடங்கும் மகோற்சவம் 22ஆம் திகதி தீர்த்தத்துடன் இனிது நிறைவேறும்.

கடந்தவருடம் இங்கு சுமார் நாற்பது கப்பல்களே வந்தன என்றும் அவர் கூறினார்.

துறைமுகத்தில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக சீமெந்து, உரம் ஏற்றிவந்த கப்பல்களில் கடந்தஇருமாதங்களில் தாமதம் ஏற்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

தர்கள் பலர் கடமையாற்றி வருகின்றனர். அதனால் அம் மாவட்டங்களில் தென்னைப் பயிர்ச் செய்கைக்கு மக்கள் ஊக்கு விக்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் பொதுவில் ஒரே ஒரு பிராந்திய முகாமையாளர்

குமார் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியை ஜூன்மாதகடைசியில் நடாத்தவுள்ளது.


இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (42)

மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(B/ 1153)



4ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி

## லெப்டினன்ற் அர்ச்சுனா

(சதாசிவம் தமிழரசுவரன்)

| இன்பம்தந்த நாள் | துன்பம்வந்த நாள்: |
|---|---|
| 4-4-1960 | 12-6-1986 |

மானங் காத்து மண்காத்து நின்று தம்முயிரைத்
தானங் கொடுத்து எ ்மை வாழவைத்த
தமிழ்த் தெய்வங்களே!
கானகத்தில் வாழ்ந்தீர்கள்! கடும் சமர் புரிந்தீர்கள்!
தேனமுதத் தமிழீழமதை மீட்டெடுத்துத்
தரணியிலே உயர்த்தினீர்கள்!
வானம் தெரியுமட்டும் வையமுள்ள மட்டும்
உங்களை மறப்பரோ மறத்தமிழர்
ஊனமுருக உள்ளமுருக உங்களை நினைக்கின்றோம்
அதனால்
போன உயிர்களுடன் எம்முயிரும் போனால்
போகட்டுமென
ஆனந்தக் களிப்புடனே ஆயிர ஆயிரமாய்
குழந்தைகள் ஆணும் பெண்ணுமாய்
பேனாவால் எழுதிவைத்து வீட்டுக்கும் தெரியாது
வருகின்றார் களத்திற்கு
ஏனோதானோவென்று நினைக்க எம்மிடம்
எவருமில்லை எனிமேல்-- அதனால் அடைவீர்!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

41, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்.

(B/350)

### சிந்தனைக்கு

யாகாவாராயினும் நாகாக்க
காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு

– குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 12-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## வாழப்பாடியாருக்கு ஒரு வார்த்தை!

தமிழ்நாட்டில் சில அரசியல்வாதிகளுக்குத் தங்களைப் பற்றி சில சமயங்களில் சந்தேகம் வந்துவிடுகிறது. மக்கள் தங்களை மறந்துவிட்டார்களோ அல்லது மறந்துவிடுவார்களோ என்ற சந்தேகம்தான் அது. இந்தச் சந்தேகம் தோன்றியதும் ஏதாவது ஒரு மேடையைத் தேடிப் பிடித்துப் பயன்படுத்த முனைவார்கள்; இல்லையேல் பத்திரிகை ஒன்றின் நிருபரைத் தேடிப் பிடித்து அறிக்கை விடுவார்கள்.

இந்த வகைத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளில் வாழப்பாடி ராமமூர்த்திக்கு முதலிடம் கொடுக்கலாம்.

மூப்பனாருடன் சண்டை போடுவார்; பத்திரிகைகளுக்கு மூப்பனாரைப் பற்றியும் அறிக்கை விடுவார். பின்னர் அவருடன் சமாதானமும் செய்துகொள்ளுவார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலிருப்பவர்கள் எவரையாவது வம்புக்கு இழுப்பார். ஜெயலலிதா காலில் வீழ்ந்தும் வணங்குவார்.

சமீபத்தில் திருமதி வைஜயந்திமாலா பாவியை வம்புக்கிழுத்தார். ''இது தூங்கும் பெண்புலி; என்னைச் சுரண்டினால் விளைவு மோசமாக இருக்கும்'' என்று வைஜயந்தி கர்ஜித்தார். வாங்கிக் கட்டிக்கொண்டு வாழப்பாடி அசந்து போனார்.

திடீரென்று மக்கள் தன்னை மறந்துவிடுவார்களோ என்ற சந்தேகம் வந்துவிட்டது.

மக்களுக்குத் தன்னை ஞாபகப்படுத்தவும் மக்கள் தன்னைப்பற்றிப் பேசவும் புதியதொரு சர்ச்சையைக் கிளப்பலாம் என்று யோசித்தார்.

தமிழ் நாட்டு அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் சவால் விட்டுக்கொண்டிருக்கும் சந்தனமரக் கடத்தல் கொள்ளைக்காரன் என்று பெயர் பெற்றிருக்கும். வீரப்பனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முடிச்சுப் போட்டால் தனது பெயர் அடிபடும் என்று யோசித்த வாழப்பாடி வீரப்பனுக்கு விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கொடுப்பதாக அறிக்கை விட்டார்.

வீரப்பனுக்கு ஆயுதம் கொடுக்கிறார்கள் விடுதலைப் புலிகள் என்று மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுறமாதிரிச் சொன்னாலும் அது அவ்வளவுக்கு மக்கள் மத்தியில் எடுபடாது என்ற சந்தேகமும் வாழப்பாடியாருக்கு ஏற்பட்டது.

எனவே தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் 'நக்ஸலைட்' என்றழைக்கப்படும் தீவிரவாதிகளுக்கும்

# மூன்றாம் உலகில் அருகி வரும் மூலவளங்கள்

# முதலாம் உலகில் ஆயுத உற்பத்திக்கு பயன்பாடு!

(நேற்றைய தொடர்ச்சி)

ஆயுதத் தளபாடங்களையும் இதர இராணுவ சாதனங்களையும் உற்பத்திசெய்து அவற்றைப் பேணுவதற்காகவே மூன்றாம் உலகின் சுருங்கி வரும் மூலவளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இராணுவப் பொருட்கள், இராணுவம் தொடர்பான சேவைகள் ஆகியவற்றுக்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக இராணுவம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் இன்று 5 கோடிப்பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்: இவை சம்பந்தப்பட்ட தொழிற் கூடங்களும் அலுவலகங்களும் 5 இலட்சம் சதுர மைல்கள் பரப்பளவை இடங்கொண்டுள்ளன; இராணுவம் சம்பந்தமான வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகளில் 5 இலட்சம் விஞ்ஞானிகள்வேலைக் கமர்த்தப்பட்டுள்ளனர்; உலக முழுவதிலும் நடக்கும் வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகளில் இது 40 வீதம் ஆகும். மற்றோர் புறமோ, உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 40 சதவீதத்தினருக்குப் போதுமான மருத்துவ சேவைகள் இல்லை; 7 1/2 கோடிப்பேர், கடுமையாக சத்தூட்டக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்; 30 கோடிப் பேருக்கு சுத்தமான தண்ணீர் கிடைப்பதில்லை; மூன்றாம் உலகில் தண்ணீரால் பரவும் நோய்களால்மாதந்தோறும் கிட்டத்தட்ட 7 1/2 இலட்சம் பேர் மடிந்துகொண்டிருக்கின்றனர்.

### மூன்றாம் உலகம் வளர்ச்சியா? நெருக்கடியா? என்னும் நூலில் இருந்து

### முதல் உலகத்திற்கான ஆலோசனைகள்

1. முதல் உலகத்திலுள்ள ''நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் குழுக்கள்'' மூன்றாம் உலக மூலவளங்களைக் கொள்ளையடிப்பதைத் தமது அரசாங்கங்களுடன் பேசி நிறுத்த வேண்டும். இல்லாவிடில் ஒரு பெரும்உயிர்ச்சூழல்பேரழிவை உலகம் தவிர்க்கவியலாமல் போய்விடும்.

2. மேலும், இக் குழுக்கள் தங்கள் நாட்டு மக்களின் நுகர்வு முறைகளும் வாழ்க்கை முறைகளும் மூன்றாம் உலகின் மூலவளங்களை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன என்பதை அந்த மக்களுக்கு உணர்த்த வேண்டும். எளிமையான வாழ்க்கை முறையையும் அறிவார்ந்த, மட்டுமீறாத நுகர்வு முறையையும் அவர்களை ஏற்கச் செய்யவேண்டும்.

### மூன்றாம் உலகத்திற்கான ஆலோசனைகள்

1. மூன்றாம் உலக அரசாங்கங்கள், தமது மக்களுக்கான உண்மையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இப்போதைய மேற்கு நாட்டு வளர்ச்சியை முன் மாதிரிகள் முற்றிலும் பொருத்தமற்றவை என்பதை உணரவேண்டும். மூன்றாம் உலகிற்கும் முதலாம் உலகிற்குமிடையே இன்றுள்ள உறவு, வளர்முகப் பொருளாதாரங்கள், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களைச் சார்ந்திருக்கும் ஒரு தலைச்சார்பான உறவு தான் என்பதை உணரவேண்டும்.

2. அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் என்ற அணுகலை மேற்கொண்டு சுயசார்பான பொருளாதாரங்களை வளர்க்க மூன்றாம் உலக அரசாங்கங்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

இந்த அணுகலின் மூலம் நிலம், உழைப்பு போன்ற மதிப்புமிக்க மூலவளங்கள் நமக்குத் தேவையில்லாத பயிர்களை உற்பத்தி செய்வதில் விரயமாவதைத் தடுக்க முடியும். அதே சமயத்தில் மூலதனம் மிகுதியாக முதலீடு செய்யப்படாததும் உழைப்பாளர் மிகுதியாகத் தேவைப்படுவதுமான சிறுரகத் தொழில்களைக் கொண்ட சுயசார்பான தொழிற் கொள்கையை மேற்கொள்ள வேண்டும்.

3. இந்தச் சூழலில், நிர்ப்பந்தக் குழுக்களின் பாத்திரம், மக்கள் பங்கேற்கும் ஜனநாயக முறையின்மூலம் சுயசார்பான மாற்றுப் பொருளாதாரங்களை வளர்க்குமாறு தங்கள் சொந்த அரசாங்கங்களை வற்புறுத்துவதாகும்.

4. நமது மூலவளங்கள் முதலாம் உலகத்தால் விரைவாகத் தீர்த்துக்கட்டப்படாமலிருப்பதற்கு மூன்றாம் உலக அரசாங்ககங்கள் கட்டாயம் செய்ய வேண்டியவை:

★ மரங்கள் வெட்டுவதைக் குறைக்க வேண்டும். மரங்கள் வெட்டுவதற்கான உரிமைகள் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். வனப்பாதுகாப்புத் திட்டங்களையும், வனப்புதுப்பிப்புத் திட்டங்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

★ ஏற்றுமதிக்கான பயிர்களுக்குப் பதிலாக உள்நாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கான உணவுப் பயிர்களைச் சாகுபடி செய்ய நிலங்களைப் பயன்படுத்த வேண்டும்.

★ நாசகரமான மீன்பிடிப்பு முறைகள்மீது கெடுபிடியான கட்டுப்பாட்டைச் செலுத்துவதன் மூலம் மீன்வளங்களைப் பாதுகாத்து, உள்நாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்படும்வரை ஏற்றுமதிகளை நிறுத்த வேண்டும்.

★ குறைந்து வரும் கனிய வளங்களைப் பொறுத்தவரை, கனிவளப்பாதுகாப்புக் கொள்கையை மேற்கொண்டு, கனிவளத் தொழிலையும், அவற்றுக்கான சந்தையையும் பன்னாட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்துவதைத் தடுக்க வேண்டும்.

★ வனவிலங்குகள் விற்பனை அனைத்தையும் தடை செய்ய வேண்டும்.

★ தாவர ஜீன்களைப் பொறுத்தவரை மூன்றாம் உலக நாடுகள் தங்கள் நாட்டில் தாவர ஜீன்கள் சேகரிக்கப்படுவதைக் கண்காணிப்புச் செய்யும் உரிமைகளைச் சட்டமாக்க வேண்டும்.

### 1984 நவம்பர் 9-14 இல் பெனாங்கில் நடைபெற்ற மூன்றாம் உலக மகாநாட்டின் அறிக்கைகளும் முடிவுகளும்

5. ஆயுதக் குறைப்புக்கான அழைப்புகளுக்கு ஆயுத வர்த்தகத்தில் இறங்காமல் செவிமடுத்தல், உலக முழுவதன் நலன்களுக்காகவும் எஞ்சியுள்ள உலக மூலவளங்களைப் பாதுகாத்து வைத்திருப்பதற்காகவும் ஆயுதக் குறைப்பு செய்யுமாறு வல்லரசுகளுக்குக் கோரிக்கைகள் விடுத்தல்.

ஆயுதக் குறைப்புக்கு ஆதரவு தேடி அதைச் செயல்படுத்துவதில் மூன்றாம் உலகில் உள்ள அரசுசாரா அமைப்புகள் சேர்ந்து கொள்ளுதல்.

(தொடரும்)

# முதலாவது நூலக சங்கத்தை அமைத்தவர் மாணிக்கவாசகர்

(யாழ்நகர்)

''இலங்கையில் முதலாவது நூலகவியல் சங்கத்தை சுமார் 34 வருடங்க க்கு முன் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்து, நூலகவியக்கத்தையும் நூலகவியல் கல்வியையும் வளர்த்து

ரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்''.

இவ்வாறு கா. மாணிக்கவாசகரின் நூலக சேவையினைப் பாராட்டி கொழும்பில் உள்ள இலங்கை தேசியநூலகசேவைகள் சபை

கா. மாணிக்கவாசகர் இலங்கைநூலகச் சங்கத்தின் வட பிரதேச பிரதிநிதியாகவும், ஆட்சிமன்ற உறுப்பினராகவும் தேர்தல் அதிகாரியாகவும், யாழ். மத்திய கல்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் இல்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமமான வளத்தாப்பிட்டியில் கடந்த காலங்களில் அரசபடைகளின் அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், வீடுவாசல்களை இழந்தவர்களுக்கும் இதுவரை அரச உதவிகள் கிடைக்க

குரிய விடயமாகும்.

அரச உதவிகள் இல்லாத போதிலும், தனியார் உதவிகள் கூட கிடைக்காதது மேலும் வேதனைக்குரியதாகும்.

வளத்தாப் பிட்டிக் கிராமப் பிரமுகரும் முன்னாள் அம்

இல்லை; 7 1/2 கோடிப்பேர், கடுமையாக சத்துாட்டக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்; 30 கோடிப் பேருக்கு சுத்தமான தண்ணீர் கிடைப்ப

1. மூன்றாம் உலக அரசாங்கங்கள், தமது மக்களுக்கான உண்மையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இப்போதைய மேற்கு நாட்டு

சொந்த அரசாங்கங்களை வற்புறுத்துவதாகும்.

4. நமது மூலவளங்கள் முதலாம் உலகத்தால் விரைவாகத் தீர்த்துக்கட்டப்படாமலிருப்

வளங்களைப் பொறுத்தவரை, கனிவளப்பாதுகாப்புக் கொள்கையை மேற்கொண்டு, கனிவளத் தொழிலையும், அவற்றுக்கான சந்தையையும் பன்

கில் உள்ள அரசுசாரா அமைப்புகள் சேர்ந்து கொள்ளுதல்.

(தொடரும்)

மக்களுக்குத் தன்னை ஞாபகப்படுத்தவும் மக்கள் தன்னைப்பற்றிப் பேசவும் புதியதொரு சர்ச்சையைக் கிளப்பலாம் என்று யோசித்தார்.

தமிழ் நாட்டு அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் சவால் விட்டுக்கொண்டிருக்கும் சந்தனமரக் கடத்தல் கொள்ளைக்காரன் என்று பெயர் பெற்றிருக்கும். வீரப்பனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முடிச்சுப் போட்டால் தனது பெயர் அடிபடும் என்று யோசித்த வாழப்பாடி வீரப்பனுக்கு விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கொடுப்பதாக அறிக்கை விட்டார்.

வீரப்பனுக்கு ஆயுதம் கொடுக்கிறார்கள் விடுதலைப் புலிகள் என்று மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுறமாதிரிச் சொன்னாலும் அது அவ்வளவுக்கு மக்கள் மத்தியில் எடுபடாது என்ற சந்தேகமும் வாழப்பாடியாருக்கு ஏற்பட்டது.

எனவே தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் 'நக்ஸலைட்' என்றழைக்கப்படும் தீவிரவாதிகளுக்கும் விடுதலைப்புலிகளே ஆயுதங்கள் வழங்குகிறார்கள் என்று சேர்த்துப் புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார்.

இது மட்டுமல்ல தமிழ் நாட்டிலிருந்து ஆட்களை இலங்கைக்குள் கடத்திக் கொண்டு வந்து விடுதலைப் புலிகள் அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியுமளித்துத் தமிழ் நாட்டுக்குத் திருப்பி அனுப்புகிறார்கள் என்றும் வாழப்பாடியார் 'கதைபண்ணி' இருக்கிறார்.

இப்படி விடுதலைப்புலிகளிடம் பயிற்சி பெற்றவர்கள் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்து கொலை கொள்ளைகளில் ஈடுபடுகிறார்களாம். இதுவும் வாழப்பாடியாரின் கண்டுபிடிப்பு!

நல்லவேளை தமிழ்நாட்டில் ஊர்வலங்கள், கூட்டங்களைக் குழப்புவதும், தீ வைப்பதும், சோடாப் போத்தல்களை வீசி நொறுக்குவதும் ஏன் தமிழ்நாடு சட்டசபையில் ஒலிவாங்கியைப் பிடுங்கி அடிபடுவது எல்லாமே விடுதலைப்புலிகள் கொடுத்த பயிற்சிதான் என்று வாழப்பாடியார் சொல்லாமல் விட்டார்!

நாம் அவருக்கு ஒன்றை மட்டுமே சொல்ல விரும்புகிறோம்.

ஐயா, வாழப்பாடியாரே உங்கள் தமிழ்நாட்டுச் சாக்கடை அரசியலுக்குள் எங்கள் புனிதமான விடுதலைப் போராட்ட வீரர்களை வம்புக்கிழுத்துக் கொச்சைப்படுத்தாதீர்கள்.

இது நல்லதற்கல்ல!

## விளையாட்டுப் போட்டி

பூவரசன் குளம் கொத்தணி மகாவித்தியாலயமைதானத்திலும், ஓமந்தை கொத்தணி மகாவித்தியாலயமைதானத்திலும் அந்தந்த கொத்தணிப் பாடசாலைகளின் கீழ் உள்ள பாடசாலைகளை ஒன்றிணைத்து இல்ல விளையாட்டுப்போட்டிகள்நடைபெற்றன

கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் வவுனியா உதவிகல்விப் பணிப்பாளர் திரு.நாகராஜா கலந்து கொண்டார்.

பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்புடன் இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. (தி)

## இயந்திரப்படகு

திகிலிவெட்டைபாடசாலை அடிக்கல் நாட்டு விழாவும், திகிலி வெட்டைக்கான இயந்திரப்படகு சேவை, ஆரம்ப வைபவமும்அண்மையில் நடைபெற்றது.

இவ் நிகழ்ச்சிக்கு மட்டக்களப்பு, அம்பாறை தளபதி கருணா பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

அரசியல் பொறுப்பாளர் திரு-விசு பேறூட் ராணுவப் பொறுப்பாளர் ரூபன், சந்திவெளி-திகிலி வெட்டை பொறுப்பாளர், மணி,மற்றும் கோட்டக் கல்வி அதிகாரி சி.நாகேந்திரம், கொத்தணி, அதிபர் திரு-வேலுப்பிள்ளை, ஆகியோரும் மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (29)

# முதலாவது நூலக சங்கத்தை அமைத்தவர் மாணிக்கவாசகர்

(யாழ்நகர்)

''இலங்கையில் முதலாவது நூலகவியல் சங்கத்தை சுமார் 34 வருடங்கக்கு முன் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்து, நூலகவியக்கத்தையும் நூலகவியல் கல்வியையும் வளர்த்து வரும் கா. மாணிக்கவாசகர் அவர்கள் நூலகங்களில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தொழில்வாய்ப்பை பெறுவதற்கு வழிகாட்டியாக விளங்கி வருகின்றார், அவர் நூலகவியலின் முதன்மையான கோலன் பகுப்பாக்கத்தை சுயமாகக் கற்று எழுதிய ஆய்வுக் கட்டுரைகளுக்கு நூலகவியல் அறிஞர் கலாநிதி எஸ். ஆர். ரங்கநாதனின் அங்கீகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்''.

இவ்வாறு கா. மாணிக்கவாசகரின் நூலக சேவையினைப் பாராட்டி கொழும்பில் உள்ள இலங்கை தேசியநூலகசேவைகள் சபை மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் பிரிட்டிஸ் கவுன்சில் நூலகர் திரு. ஹரிசன் பெரேரா குறிப்பிட்டார்.

இப்பாராட்டு வைபவத்தில் இலங்கைத் தேசிய நூலகர் திருமதி ஈஸ்வரி கொரியா அவர்கள் திரு கா. மாணிக்கவாசகருக்கு மலர்மாலையணிவித்து பாராட்டிதழ்களும் வழங்கினார்.

கா. மாணிக்கவாசகர் இலங்கைநூலகச் சங்கத்தின் வடபிரதேச பிரதிநிதியாகவும், ஆட்சிமன்ற உறுப்பினராகவும் தேர்தல் அதிகாரியாகவும், யாழ். மத்திய கல்லூரியின் நூலகராகவும் விளங்குகின்றார். (52)

# அனலைதீவுப்பயணிகள் அவலம்

ஆசிரியர்,
ஈழநாதம்,
ஐயா,

அனலை தீவு- ஊர்காவற்றுறை கடற்பாதையில் இரண்டு படகு சேவைகள் மட்டுமே நடை பெறுகின்றன. இவை தனியாரினாலேயே நடாத்தப் படுகிறது. அவர்களோ பிரயாணிகளின்நன்மைகளைக் கருத்திற் கொள்ளாது இலாப மீட்டுவதை மட்டுமே நோக்கமாகக்கொண்டு செயற்படுகின்றனர்.

சேவை நேரத்தில் பயணிகள் படகுக்காக காத்துக் கொண்டு நிற்கையில் பிரயாணிகளை ஏற்றாது பொதிகளை ஏற்றிச் செல்கிறார்கள். இதனால் பயணிகள் பெரிதும் அல்லலுறுகின்றனர்.

கடந்த சனியன்று காலை 8.15 மணிக்கு சேவையில் ஈடுபட்டிருந்த ''ஆசைப்படகு'' என்ற படகு பிரயாணிகளை ஏற்றாது புகையிலைச் சிப்பங்களை ஏற்றிச் சென்றது. இதில் வேடிக்கை என்னவென்றால் அனலைதீவு அம்மன் கோவில் தேர்த் திரு விழாவுக்குச் சென்ற மக்களே படகுக்குக் காத்து நின்றனர்.

உரிமையாளரிடம் இதைப் பற்றி பயணிகள் முறையிட்ட பொழுது அவர் தான் தனது விருப்பப்படியே படகு சேவையை நடத்துவேன்என்று இறுமாப்பாகப் பதில் அளித்தார்.

முக்கியமான தினங்களிலேயே இப்படி நடப்பவர் ஏனைய தினங்களில் நடக்கும் முறையைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

இந் நிலையில் மீன்பிடி வள்ளங்களின் உரிமையாளர் சேவையை நடாத்த முன்வந்த போது படகு சேவையின் உரிமையாளர் அவர்களுக்கு பல விதத்திலும் தொல்லைகளைக் கொடுத்து அவர்களின் முயற்சிகளையும் தடுத்து விட்டார்கள்.

## மக்கள் மடல்

இந்த நிலையில் அனலை தீவுக்கு ஏனைய பகுதியில் இருந்து பயணிகள் பிரயாணம் செய்வதற்கு சுற்றுகின்றனர்.

படகில் பயனிகளுக்குபோதுமானதானவசதிகளும்இல்லை. டீசல்எஞ்சினின் புகைவேளியே செல்லாது படகுக் குள்ளேயே பரவுகின்றது. படகில் ஆசன வசதிகளும் இல்லை.

பல படகுகள் முன்னர் இந்தப் பாதையில் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் தற்போது இரண்டு படகுகள் மட்டுமே சேவையில் உள்ளன.

படகு சேவைக் கென சங்கம் எதுவும் அற்ற நிலையில் மக்கள் சேவையை ஒழுங்குபடுத்துவதற்குயாரிடம் முறையிடுவது எனப் பெரிதும் அங்கலாய்க்கின்றனர்.

என். நவநீதன்
யாழ்ப்பாணம்

## பதிவில்லாத நிறுவனங்கள்

மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டத்தில் 3 பதிவு செய்யப்படாத தனியார் தொலைபேசி நிறுவனங்கள் செயல்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு, கல்முனை, காத்தான்குடி ஆகிய இடங்களிலுள்ளன.

மட்டக்களப்பிலுள்ள தனியார் நிறுவன தொலைபேசி பதவியொன்றில்இருக்கும்அரசியல்வாதி யொருவரின் தனிப்பட்ட பாவனை தொலைபேசியாகும்.

வீட்டில் தனது அலுவலகம் என விண்ணப்பம் செய்து வீட்டிலிருந்த இணைப்பை இடமாற்றம் செய்துள்ளார் என தெரியவருகிறது. (37)

## 'இபாட்' பிரதிநிதி வருகிறார்

சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான இபாட் நிறுவன இலங்கைப்பிரதிநிதி திரு.எஸ். ஜெரமி வோல் பனைவள அபிவிருத்திப் பயன்பாடுகள் பற்றி நேரில் பார்வையிடுமுகமாக யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இவ் விஜயத்தை மேற்கொண்டுள்ள திரு. ஜெரமி வோலுடன் இலங்கைப்பனை அபிவிருத்திச்சபை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட ஆலோசகர் திரு ரி திருலிங்கநாதனும் வருகை தந்திருந்தார்.

திரு ஜெரமி தலைமையிலான குழு சுன்னாகத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் றொமி - பாம் போஷா உற்பத்திச் தொழிற்சாலையைப் பார்வையிட்டது. பாரிய இயந்திரங்களின் உதவியுடன் இயங்கும் இத்தொழிற்சாலையின் உற்பத்திகள் பற்றிப் பரிசோதனை உத்தியோகத்தர் திருமதி ஜீ எம். யோகநாதன் விளக்கிக்கூறினார். (24)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் இல்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமமான வளத்தாப்பிட்டியில் கடந்த காலங்களில் அரசபடைகளின் அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், வீடுவாசல்களை இழந்தவர்களுக்கும் இதுவரை அரச உதவிகள் கிடைக்கவில்லை.

வீடுகளற்ற குடும்பங்கள் இன்னும் மர நிழல்களில் வாழ்க்கைநடத்துகின்ற நிலை இருந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

அரச உதவிகள் இல்லாத போதிலும், தனியார் உதவிகள் கூட கிடைக்காதது மேலும் வேதனைக்குரியதாகும்.

வளத்தாப் பிட்டிக் கிராமப் பிரமுகரும் முன்னாள் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினருமான திரு வி. சுப்பையாபிள்ளை இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார். (48)

## பாடசாலைத் திறப்பு

(வவுனியா)

வவுனியா கற்பகபுரத்திலும் ஓமந்தை விளாத்திக்குளத்திலும் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா கல்விப்பணிப்பாளர் திரு. நடரட்ணராசாவினால் இரண்டு பாடசாலை திறந்து வைக்கப்பட்டன.

கற்பகபுரத்தில், அப்பகுதி கிராம மக்களின் செலவில் கட்டப்பட்டிருந்த பாடசாலைக் கட்டடத்தை அரசு பொறுப்பேற்றதன் பின்னர் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா அற்புதராஜா மங்கள விளக்கேற்றி வைக்க, கல்விப்பணிப்பாளர் கற்பகபுரம் பாடசாலையைத்திறந்து வைத்தார். (தி)

## சாராய வியாபாரிக்கு தண்டனை

(வந்தாறு மூலை)

கடந்த 5 ஆம் திகதி வந்தாறு மூலையில் சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்துவந்த மூவரை விடுதலைப்புலிகள் கண்டுபிடித்தனர். பின்னர் இவர்கள் மூவருக்கும் மொட்டை அடித்து சட்டவிரோதமாக மது விற்பனை செய்ததற்கு கிடைத்த தண்டனை என்னும் வாசகம் அடங்கிய சுலோக அட்டைகள் தாங்கிய வண்ணம் வீதியில் நிற்க வைத்தனர். இதனை பெரும் திரளான மக்கள் வந்து வேடிக்கை பார்த்தனர்.

இதுபற்றி வந்தாறுமூலை பிரதேசப் பொறுப்பாளர் திரு பிரசன்னா விடுத்த அறிக்கை ஒன்றில் கடந்த காலத்தில் எமது பகுதிகளில் சட்டவிரோத செயல்கள் பல இடம் பெற்றுவந்தன. அவை அனைத்தையும் நாங்கள் நிறுத்திவிடுமாறு மக்களுக்கு வேண்டுகோள்விடுத்தோம் அதனைத் தொடர்ந்து யாவும் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஒருசிலர் ஒருசில சட்டவிரோத செயல்களில்ஈடுபட்டுவருகிறார்கள். அவ்வாறு ஈடுபடுபவர்கள் இனங்காணப்பட்டால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். எனவே எவரும் இவ்வாறான தீய செயல்களில் ஈடுபட வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். (29)

## கசிப்பு பிடிபட்டது

(தீவுப்பகுதி)

புங்குடுதீவு, வேலணைப் பகுதிகளில்சட்டவிரோதமான முறையில் வடிக்கப்பட்ட கசிப்பும் கசிப்பு வடிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

வேலணை தெங்குபனம் பொருள் விற்பனவு கூட்டுறவுச்சங்க ஊழியர்களும், விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் குழுவொன்றும் திடீர் சோதனைகளை மேற்கொண்டபோதே இவை கைப்பற்றப்பட்டன. கசிப்பு உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்புகள் யாவும் வெளியே ஊற்றப்பட்டது. அத்துடன் தொடர்ந்து இப்படியான செயல்களில் ஈடுபட்டுவந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இது இவ்வாறு இருக்கவேலணைப் பகுதியில் திடீர்சோதனை மேற்கொண்ட பெண் புலிகள் கசிப்பு காய்ச்சியவர்களையும் அதனை வைத்திருந்தவர்களையும் பிடித்ததுடன் அவர்களை கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தனர். (15)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலே திட்டங்கள் முடிவுறாமைக்கு காரணம்

- ராஜன்

(வடமராட்சி கிழக்கு)

அரசாங்க அதிகாரிகள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டும். யாழ் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முடிவுறாத நிலையிலிருப்பதற்குக் காரணம் அரசாங்க அதிகாரிகளினதும் உத்தியோகஸ்த்தர்களினதும் அசிரத்தையே.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் என்னும் விடயம் தொடர்பாக நடந்த கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. இ. ராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

மருதங்கேணி அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை (9-6-90) இக் கலந்துரையாடல், யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜன் மேலும் கூறுகையில், 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட சில அபிவிருத்தி வேலைகளுக்கு சில திணைக்களங்கள் தற்போதுதான் கேள்விப் பத்திரங்களைக் கோருகின்றன. அபிவிருத்தி வேலைகளுக்குத் தடையாக இருப்பதாகக் கூறப்படும் கல், மண் பிரச்சினைகளை எழுத்து மூலம் தரும்படி கோரியும் இதுவரை எவரும் எழுத்து மூலம் தரவில்லை.

100 தொன் கிறேசர் கல்லை வவுனியாவிலிருந்து தருவிக்கும்படி கூறியிருந்தோம்.

எமது பிரதேசத்தின் எதிர்கால நலனை முன்னிட்டே மரங்களை வெட்டுவதற்குக் கட்டுப்பாடு வைத்துள்ளோம். எனினும் தேவை கருதி மரம் கல், மண் ஆகியவற்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கி வருகின்றோம்.

வீடு, கோயில் ஆகியவற்றிற்கு மரம், கல், மண் தேவையெனக் கூறி அனுதிப் பத்திரத்திற்கு வருகிறார்களே தவிர, பாடசாலைக்கு, வீதிக்கு என எவரும் வரவில்லை, என்றார்.

இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சார்பில் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக், வடமராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. குணம், வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பொறுப்பாளர் திரு. சில்வஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் சார்பில், பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு வ.ளர்கள், தாஸ், ரவி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.


அத்தோடு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. த.சந்திரசேகரம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள், வடமராட்சிக் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

இப் பிரதேசத்தில் வீதி, கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. (36)

## மலேரியாவால் 15 பேர் மரணம்

(டாக்கா)

மலேரியா நோய் காரணமாக பதினைந்து பேர் வரை மரணமான சம்பவம் பங்களாதேஷின் தென்கிழக்குப் பகுதி நகரம் ஒன்றில் இடம்பெற்றது. இவர்களில் அதிகமானோர் சிறுவர்கள்.



# வடமத்திய, வடமேல் மாகாணசபை உறுப்பினர்-புலிகள் சந்திப்பு

(வவுனியா)

நேற்றுக் காலை (11.6.90) வடமத்திய மாகாண சபை உறுப்பினர் நிசங்க திஸநாயகாவும், வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஜோர்ஜ் பெர்னாண்டோவும் வவுனியா வந்திருந்தனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து அண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே வவுனியா தாண்டிக் குளம் புலிகளின் காவல் அரண் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் பற்றி உரையாடினார்கள்

அவர்களின் சந்திப்பில் அண்மையில் பூஓயாப் பாலத்தருகில் இடம் பெற்ற லொறிக் கொள்ளையடிப்புப் பற்றியும் லொறியின் சாரதி கொல்லப்பட்டது பற்றியும் பேசப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் பற்றிய விபரங்களை தாம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், புலனாய்வுத் துறையினர் வவுனியா வந்து இராணுவத்தினரையும் பொலிஸ் பகுதியினரையும் விசாரணை செய்ய உள்ளதாகவும் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் நிஸங்க திசநாயக தெரிவித்தார்.

அண்மையில் மன்னார் மடுக் கோவில் அருகில் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஜோர்ஜ் பெர்னான்டோவின் பஜரோ வாகனம் இனந்தெரியாத நபர்கள் சிலரால் கடத்தப்பட்டது தெரிந்ததே. இந்த வாகனத்தை மீட்டுத் தரும்படி புலிகளிடம் இரு மாகாண சபை உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டனர். (தி)

## அதிஷ்டம் பெற வந்தவர்கள் கைது!

(கலிபோனியா)

கலிபோனியா அதிர்ஷ்டலாபச் சீட்டு இழுப்பு ஒன்றில் 200 பேர்களுக்கு ரொக்கப் பணம் பரிசாகக் கிடைத்திருப்பதாகக் கிடைத்தஅறிவித்தலைத் தொடர்ந்து பணத்காகத் தேடப்பட்டு வந்த 500 பேர் பொலிஸ் வலையில் சிக்காமல் தப்பித்துள்ளனர். பொலிஸார் தந்திரமாக விடுத்த அறிவித்தல் ஒன்றைத் தொடர்ந்து கடந்த வெள்ளியன்று அதிஷ்ட[illegible] பணத்தைப்

## வெங்காயத்திற்காக சீனா லீக்ஸ்

(கண்டி)

வெங்காயத்திற்குப் பதி

## விலை அதிகரிப்பை அடுத்து புதிய கேள்விகள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கேள்வி அறிவுறுத்தலில் குறிப்பிட்ட விலைகளிலும் பார்க்க தற்போது கட்டடப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதை தொடர்ந்து ஒப்பந்தகாரரர் பழைய விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்து வழங்க முடியாது உள்ளது என தமக்கு அடிக்கடி வந்து முறையிட்டதைத் தொடர்ந்து மீண்டும் ஒரு சில கேள்விகள் கோரப்பட்டுபுதிய விலைகளுக்கேற்ப இவர்களுக்கு ஒப்பந்தங்கள் தீர்மானிக்கப்படும் என யாழ் மாநகர சபை வேலைப்பகுதி அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

இதன் மூலம் தாம் புதிய வேலைத் திட்டங்களை விரைவாக முடிக்க ஒப்பந்தகாரருக்கு உதவ எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## உணவு முத்திரை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு முத்திரை வழங்கும் நடவடிக்கை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கல்விபயிலும் 74,505 மாணவ - மாணவிகளுக்கு இந்த உணவு முத்திரை வழங்கப்படவுள்ளன. (67)

### வாழைச்சேனை

(1ஆம் பக்கத் தொடர்ச்சு)

மேற்பட்ட பொலிஸார் சரணடைந்துள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர்

### போலி . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணைப் பொலிஸார் இவ்வாறான வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களைக் கண்காணித்து வருகின்றனர்.

### தமிழ்ப்பகுதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயாபரன், திரு. ஏ. எல். சிவானந்தன், புனர்வாழ்வு அமைச்சுத் திட்டப் பணிப்பாளர் திரு ரி. இலங்கைநேசன், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. எஸ். கணேசநாதன் இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில்:

### பாதுகாப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ங்க அமைச்சர் ஆகியோர் கூடி நிலைமைகளை ஆராய்ந்தனர். இக்கூட்டத்தில் முப்படைத் தளபதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டதாக அறியப்படுகிறது.

### சுகாதார

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளருடன் கலந்துரையாடல் செய்ததன் மூலம் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு நிதியிலிருந்து இந்த வசதிகளைச் செய்து கொடுக்க ஆணையாளர் உடன் பட்டுள்ளார்.

நவீனசந்தைக்கு மலசலகூட வசதி செய்து கொடுத்தல், தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக குழாய் நீர்வசதி செய்து தருதல் மின்சாரவசதிகளை புதிதாக அமைத்துத் தருதல் போன்ற விடயங்கள் தம்மால் முன்வைக்கப்பட்ட போது மாநகர சபை ஆணையாளர் திரு. வி.பி. பாலசிங்கம் ஏற்றுக்கொண்டதாக இச்சங்கத்தின் தலைவர் த. சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின்

சபை உறுப்பினர் ஜோர்ஜ் பெர்னாண்டோவும் வவுனியா வந்திருந்தனர்.
இவர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து அண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணு

அவர்களின் சந்திப்பில் அண்மையில் பூஓயாப் பாலத்தருகில் இடம் பெற்ற லொறிக் கொள்ளையடிப்புப் பற்றியும் லொறியின் சாரதி கொல்லப்பட்டது பற்றியும் பேசப்பட்டது.
மேற்குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் பற்றிய விபரங்களை

# அதிஷ்டம் பெற வந்தவர்கள் கைது!

(கலிபோனியா)
கலிபோனியா அதிர்ஷ்ட லாபச் சீட்டு இழுப்பு ஒன்றில் 200 பேர்களுக்கு ரொக்கப் பணம் பரிசாகக் கிடைத்திருப்பதாகக் கிடைத்தஅறிவித்தலைத் தொடர்ந்து பணத்தைப்பெறச்சென்றவர்களுக்கு வேறு விதமான 'அதிர்ஸ்டம்' காத்திருந்தது. அவர்களைச் சுற்றி வளைத்துப் பொலிஸார் கைதுசெய்து அரசாங்க விருந்தினர்களாக ஜெயிலில் தள்ளியுள்ளார்கள்.
கலிபோனியாவில் பலவிதமான குற்றச் சாட்டுகளுக்காகத் தேடப்பட்டு வந்த 500 பேர் பொலிஸ் வலையில் சிக்காமல் தப்பித்துள்ளனர். பொலிஸார் தந்திரமாக விடுத்த அறிவித்தல் ஒன்றைத் தொடர்ந்து கடந்த வெள்ளியன்று அதிஷ்டப் பணத்தைப் பெற வந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். பொலிஸார்தான் இந்த அறிவிப்பைச் செய்தார்கள் என்பதை அறியாத பலர், ஜெயிலில் இருந்து கொண்டு தமது அதிஷ்டப் பணத்தைப் பெற்றுத் தரும்படி அதிகாரிகளை நச்சரித்தபடி உள்ளனராம்

# "வீடில்லாதவர்களுக்கு வீடுமில்லை, நிவாரணமுமில்லை

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் வழங்கப்படும் அரசாங்க காணிகளில் குடி அமர்த்தப்பட்டோர் எவரும் தொடர்ந்து அக்காணிகளில் குடி இருப்பதில்லை. இதே வேளை காணியற்ற ஏராளம் குடும்பங்கள் வதிவிட வசதியற்று வாழ்வதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது என வீடமைப்புத் திணைக்கள தலைமை பொறியியலாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.
இந் நிலைமையை அவர் விளக்குகையில் உண்மையாக காணி வசதிகளோ வீடு வசதிகளோ இல்லாது இருப்பவர்கள் வன்முறைக் காலங்களில் வாடகை வீடுகளில் இருந்தவர்களாகவே இருப்பர் ஆனால் அந்த வீடுகள் சேதமடையும் போது வழங்கப்படும் நிவாரணம் வீட்டின் சொந்தக் காரர்களையே சென்றடைகின்றது. ஆனால் உண்மையில் காணியில்லாத வீடில்லாதவர்களை சென்றடைவதில்லை. வாடகைக்கு வீடுகளில் இருந்தவர்கள் வன்முறைகளில் தமக்கு உடல் ரீதியாகவோ தொழில் ரீதியாகவோ பாதிப்பேற்பட்டிருந்தும் நிவாரணம் பெற வசதி இல்லாதோராக உள்ளனர். இதனால் நிவாரணம் வழங்குவதில் அர்த்தமற்றதாகி விடுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# தும்புத்தொழிற்சாலைக்கு 15லட்சம் ரூபா உதவி

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள தும்புத்தொழிற்சாலைக்கு பதினைந்து லட்ச ரூபா செலவில் இயந்திரம் அமைக்கப்பட உள்ளது.
இப்பகுதி மக்கள் கயிறு பின்னுதல், தும்புத்தடி செய்தல் போன்ற சிறுகைத்தொழில் செய்து வந்தனர். இவர்களுக்குத் தேவையான தும்பு இவ்வாலையில் இருந்தே வழங்கப்பட்டது. ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைகளால் இவ்வாலை இயங்காமல் இருக்கிறது. இதனால் இப் பகுதி மக்களின் சிறுகைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இவர்களுக்குத் தேவையான தும்பினைஉற்பத்தி செய்வதற்காகமாநகர சபையினால் பதினைந்து லட்ச ரூபா செலவில் இயந்திரம் மூலம் இவ்வாலையில் தும்பு உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ரையும் விசாரணை செய்ய உள்ளதாகவும் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் நிஸங்க திசநாயக தெரிவித்தார்.
அண்மையில் மன்னார் மடுக் கோவில் அருகில் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஜோர்ஜ் பெர்னான்டோவின் பஜரோ வாகனம் இனந்தெரியாத நபர்கள் சிலரால் கடத்தப்பட்டது தெரிந்ததே. இந்த வாகனத்தை மீட்டுத் தரும்படி புலிகளிடம் இரு மாகாண சபை உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டனர். (தி)

## வெங்காயத்திற்காக சீனா லீக்ஸ்

(கண்டி)
வெங்காயத்திற்குப் பதிலாக சீனாவின் 'லீக்ஸ்' இலையை கறிகளுக்குப் பயன்படுத்தலாம் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.
அண்மைக் காலமாக வெங்காயத்திற்கு ஏற்பட்ட அதியுயர்ந்த விலையினைத் தொடர்ந்தே இப் பிரதியீட்டின் பயன்பற்றி ஆலோசனை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
மாத்தளை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் சீன நாட்டைச் சேர்ந்த 'நீரா லீக்ஸ்' எனப்படும் வெங்காயலீக்ஸே இதுவாகும்.
''எலியுமி ரியபரோசம'' என்ற ரகத்தைச் சேர்ந்த இந்த இனம் கீரை போன்ற இலைகளைத் தரக் கூடியதாகும். இந்தச் செடியில் கிழங்கு இருக்காது ஒரு செடியில் இருந்து தொடர்ந்து பல தடவைகளுக்கு மேல் இலைகளைப் பெறலாம்.

## கிளிநொச்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
புதிய விவசாய பீடத்திற்கு 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
விவசாய பீடத்திற்கென பேராசிரியர்கள், விரிவுரையாளர்களைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்கனவே நியமித்திருக்கிறது.

## மனைவியால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
உதவியுடன் பின்லாந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.
அங்கே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தானே டாக்டரை இரவு படுக்கையில் வைத்து சுட்டுக் கொன்று சடலத்தை வீட்டுக்குப் பின்புறம் புதைத்து விட்டதாகவும் மனைவி பொலிசாரிடம் தெரிவித்தார்.
இதனையடுத்து புதைத்து வைக்கப்பட்ட சடலம் பொலிஸாரில் தோண்டி எடுக்கப்பட்டு இங்கே அனுப்பப்படவுள்ளது.

யோரும் கலந்து கொண்டார்கள்.
அத்தோடு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. த.சந்திரசேகரம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள், வடமராட்சிக் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.
இப் பிரதேசத்தில் வீதி, கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. (36)

## ஆங்கிலத்தில் பணிப்புரை

(யாழ்ப்பாணம்)
கல்விப்பணிப்பாளராகஆர். சுந்தரலிங்கம் யாழ். கல்வித் திணைக்களத்தில் கடமைகளைப் பாரமேற்று சுமார் இரண்டரை மாதங்களுக்குப் பிறகு நாளை கோட்டக்கல்வி அதிகாரிகளையும், ஏனைய கல்வி அதிகாரிகளையும் உத்தியோக பூர்வமாகச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இச் சந்திப்புத் தொடர்பான நிகழ்ச்சி நிரலும், அறிவுறுத்தலும் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டுள்ளன. இது குறித்து கல்வி அதிகாரிகள் சிலர் கவலை தெரிவித்தனர்.

## யாழ் மாவட்டத்துக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காணிகளை யாழ்ப்பாணத்திலுள்ள காணியற்ற குடும்பங்களுக்கு வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டது.
இக்கூட்டங்கள் அடுத்து வவுனியாவில் நடைபெறவுள்ளன. அடுத்த மாதம் 6 ஆம் திகதி வட, கிழக்கு அரசாங்க அதிபர் கூட்டமும், 7 ஆம் திகதி வட, கிழக்குப் புனர்வாழ்வுக் கூட்டமும் நடைபெறும். (ம)

## சர்வதேச

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள் லண்டனிலுள்ள ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகர் மூலமாகவும், குடியகல்வு குடிவரவுத் திணைக்களம் ஊடாகவும் அனுப்பப்பட்டன. காரணங்காட்டாமல் எமது விஸாக்கள் மறுக்கப்பட்டன.
பன்முகப்படுத்தப்பட்ட ஒரு காரியாலயத்தை, அதனுடன் நீண்ட காலம் தொடர்பில்லாமல் நடத்த முடியாது என்றும், அதனால் சர்வதேச மன்னிப்புச் சபை நிர்வாகக்குழு கொழும்பிலுள்ள சேவையை மூடி விடுவது என்று சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் முடிவு செய்ததாக அவ்வறிக்கை கூறுகிறது.

## உணவு முத்திரை

(திருக்கோணமலை)
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு முத்திரை வழங்கும் நடவடிக்கை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கல்விபயிலும் 74,505 மாணவ - மாணவிகளுக்கு இந்த உணவு முத்திரை வழங்கப்படவுள்ளன. (67)

## வாழைச்சேனை

(1ஆம் பக்கத் தொடர்சு)
மேற்பட்ட பொலிஸார் சரணடைந்துள்ளனர்.
அதேவேளை மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம், பான்சாலை ஆகிய இடங்களில் சிங்களவரும், பொலிஸ் நிலையத்தைச் சூழ இருந்த சிங்கள வியாபாரிகளும் பாதுகாப்புடன் விமான நிலையத்தில் புலிகளால்ஒப்படைக்கப்பட்டனர்.
இது இவ்வாறிருக்க இதன் எதிரொலியாக ஏற்பட்ட இரு வேறு சம்பவங்களில் 14 சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டனர்.
பொலிஸ் நிலைய முற்றுகை நிகழ்ந்த போது கல்முனை வாடி வீட்டிலிருந்த ஸ்ரீ லங்கா இராணுவம் வெளியேறி வந்தது. அவர்களை விடுதலைப் புலிகள் தடுத்தபோது அவர்கள் திரும்பிச் சென்றனர். பின்னர் கடற்கரை வழியாகவும், உள்வீதி வழியாகவும் கல்முனைக்குள் பிரவேசிக்க இராணுவம் முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.
அதேவேளை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்திற்கு எதிராகவிருந்த ஸ்ரீலங்காஇராணுவம் புலிகளின்தடைஅரண்களைத் தாண்டி வெளியேவர முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் காயமடைந்தனர்.
பின்னர் முகாம் திரும்பிய இராணுவத்தினர் முகாமில் இருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இச் ஷெல் தாக்குதலில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் உட்பட 30பேர் காயமடைந்தனர். இவர்கள் யாவரும் மட்டக்களப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இவ்விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த இலங்கை பொலிஸ் மா அதிபர் மட்டக்களப்பிற்கு நேற்று மாலை செல்ல விருந்ததாகக் கொழும்பில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## போலி . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணைப் பொலிஸார் இவ்வாறான வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களைக் கண்காணித்து வருகின்றனர்.

## தமிழ்ப்பகுதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தயாபரன், திரு. ஏ. எல். சிவானந்தன், புனர்வாழ்வு அமைச்சுத் திட்டப் பணிப்பாளர் திரு ரி. இலங்கைநேசன், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
திரு. எஸ். கணேசநாதன் இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில்:
தமிழ்பகுதியில் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் அதற்கு குற்றவாளிகள் நாங்கள்தான்என்பதைமறந்து விடக்கூடாது என்றார்.
புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் திரு. சரித்தரத்வத்தை பேசுகையில்;
வட-கிழக்கு மாகாண மக்களுக்குச் சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டுமென ஆர்வத்துடன் அமைச்சர் எ. எஸ். அதிகாரி இருக்கிறார்.
இக்கட்டான சூழ்நிலைகளிலும் இப்பகுதி அரச ஊழியர்கள் சிறந்த முறையில் கடமையாற்றியுள்ளனர். கடுமையான உழைப்புமூலம் தமது பணியில் வெற்றி பெற்றுள்ளார்கள். இம்மாகாண புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் சிறந்த முறையில் செயற்பட பூரண ஒத்துழைப்புத் தருவேன்என்ற உத்தரவாதத்தை அளிக்கின்றேன் என்றார்.
இம்மாநாடு தமிழ்மொழியில் நடைபெறும். தவிர்க்க முடியாத கட்டங்களில் ஆங்கிலமொழியிலும் கருத்துப்பரிமாற்றங்கள் இடம் பெறுமென பிரதம செயலானர் கூட்ட ஆரம்பத்தில் அறிவித்த போதிலும் 85 சத வீதமான இடத்தை ஆங்கில மொழி பிடித்துக் கொண்டது. (37)

யிலிருந்து இந்த வசதிகளைச் செய்து கொடுக்க ஆணையாளர் உடன் பட்டுள்ளார்.
நவீனசந்தைக்கு மலசலகூட வசதி செய்து கொடுத்தல், தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக குழாய் நீர்வசதி செய்து தருதல் மின்சாரவசதிகளை புதிதாக அமைத்துத் தருதல் போன்ற விடயங்கள் தம்மால் முன்வைக்கப்பட்ட போது மாநகர சபை ஆணையாளர் திரு. வி.பி. பாலசிங்கம் ஏற்றுக்கொண்டதாக இச்சங்கத்தின் தலைவர் த. சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.
இந்த கலந்துரையாடலின் போது யாழ். மாநகரசபை வேலைப்பகுதி பொறியியலாளர்கள் சுகாதார அதிகாரி ஆகியோர் உட்பட பலர்பங்கு பற்றினர். (அ)

## கும்புறுமுனையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் சண்டை ஓய்ந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
கல்குடா இராணுவ முகாமுக்குள் புலிப்போராளிகள் சென்றதும் இராணுவத்தினர் அங்கிருந்து தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## முறைசாராக் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
லேயே வாங்கப்பட்டதாகவும் வெளிநாட்டுப் புத்தகங்களோ நிதி ஒதுக்கீடுகளோ இன்னும் தம்மை வந்தடையவில்லை என முறைசாரா பிரிவின் அதிகாரி எஸ். வி. எஸ். சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.
மேலும் அவர் ஒவ்வொரு முறைசாராகல்விப்பிரிவிற்கும் ஒவ்வொரு நூலகங்கள் அமைத்துத்தரும் திட்டம் தம்மால் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறினார். இதற்கு ஏற்கனவே தளபாடங்கள் அந்தந்தஇடங்களுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)


## தவறிவிட்டது

குருக்கள் கையில் அணியும் பிள்ளையார் சிலை பொறிக்கப்பட்ட றச்சாபந்தனம் (தங்கக்கைச் சங்கிலி) செம்மணி றோட்டில் உள்ள வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில் அருகாமையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

பாலசுந்தரக் குருக்கள்,
வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில்,
நாயன்மார்கட்டு.

தகவல்:
பா. விக்னேஸ்வரக் குருக்கள். R 355